பக்கங்கள் : பன்னிரண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 02 வெள்ளிக்கிழமை (16-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:51

## சிங்கள மக்களின் சமாதான ஆணையைப் பெறும்

# அதிகாரம் மிக்க அரசு வரும்வரை புலிகள் காத்திருப்பதற்குத் தயார்!



## அரசியல் நெருக்கடி நீடித்தாலும் போர் நிறுத்தத்தை கடைப்பிடிப்போம் என பாலசிங்கம் உறுதிமொழி

லண்டன்,ஜனவரி16

**சட்டம் மற்றும் நிறைவேற்று அதிகாரங்களுடன் கூடிய உறுதியான அரசாங்கமொன்று கொழும்பில் பதவியேற்கும்போது அந்த அரசுடன் சமாதானப் பேச்சுக்களில் பங்குபற்ற தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராக இருக்கின்றனர் என்று புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே அரசாங்கத்திடம் அறிவித்திருக்கிறார். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான அரசியல் அதிகார இழுபறி தீர்க்கப்படும்வரை தாங்கள் காத்திருக்கத் தயார் எனவும், அதுவரை போர்நிறுத்த ஒப்பந்தத்தின் விதிகளையும் நிபந்தனைகளையும் கண்டிப்பாகக் கடைப்பிடிப்போம் எனவும், சமாதானத்தைப் பேணுவோம் எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்**

நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வேக் குழுவினரை கடந்த புதனன்று இங்கு சந்தித்துப் பேச்சுக்கள் நடத்திய போதே அன்ரன் பாலசிங்கம் இவற்றைத தெரிவித்திருக்கிறார்.

மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் லண்டன் இல்லத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது. பேச்சுக்கள் மூன்றுமணி நேரம் நீடித்தன.

நோர்வே வெளிவிவகார அமைச்சின சிரேஷ்ட அதிகாரியான எரிக் கீக்ஸ்கி மற்றொரு அதிகாரி ஆகிய இருவரும், எரிக் சொல்ஹெய்முடன் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டனர்.

கொழும்பில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே இருந்து வரும் அரசமைப்புச் சட்டநெருக்கடி, இடைநிறுத்தப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது ஆகியவை குறித்து பாலசிங்கம் - சொல்ஹெய்ம் பேச்சில் ஆராயப்பட்டது.

"சிங்கள மக்களிடமிருந்து சமாதானத்துக்கான ஆணையைப் பெறும் அரசுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த நாம் தயாராக இருக்கின்றோம். அந்த அரசுக்குத் தீமானங்களை அமுல்படுததத் தேவையான சட்ட, நிறைவேற்று அதிகாரம் இருக்கவேண்டும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்தத் தீவிர நடவடிக்கை

கொழும்பு நகரின் பாதுகாப்பை உடனடியாகப்பலப்படுத்த பொலீஸ்மா அதிபர் இந்திரா டிசில்வா நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

கொழும்பு நகரில் இடம் பெறும் மனிதப் படுகொலைகள், கொள்ளைகள உட்பட பயங்கர குற்றச்செயல்களைக கட்டுப்படுத்தவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபர் சிறிசேன ஹேரத் தெரிவித்திருக்கிறார்.

இதன்படி, இராணுவத்தினரும் பொலீஸாரும் கூட்டாக பாதுகாப்பில் ஈடுபடும் திட்டம் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் மேற்கொள்ளப்படுமென வும் பிரதிப்பொலீஸ்மா அதிபர் மேலும தெரிவித்தார்.

நகரின் முக்கிய இடங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் கூறியிருககிறார்.

## எழுச்சி நிகழ்வின் 3 ஆம் ஆண்டு நிறைவு

யாழ்ப்பாணம்,ஜன.16

யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின ஏற்பாட்டில் "பொங்கு தமிழ்" எழுச்சியின் மூன்றாம் ஆண்டு நிறைவு நாள் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 3மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சமூகத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின பிரதிநிதிகள் மற்றும் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பிரதமர் தலைமையிலான பொங்கல் விழாவிலிருந்து ஆறுமுகம் தொண்டமான் குழுவினர் வெளிநடப்பு!

கொழும்பு,ஜன.16

நுவரெலியாவில் பிரதமா தலைமையில நேற்று நடைபெற்ற தைப்பொங்கல் கொண்டாட்ட நிகழ்வில் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பிரதிநிதிகள் பிரதமருக்கு பொங்கல் வாழ்த்துத் தெரிவித்துவிட்டு உடனடியாக அங்கிருந்து வெளியேறிவிடடனர்.

தைப்பொங்கல் தேசிய கொண்டாட்ட நிகழ்வுகள் நுவரெலியாவில் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில நேற்று நடைபெற்றன. இதற்கு மலையகத்தில் உள்ள சகல கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

அழைப்பையேற்று அங்குசென்ற இ.தொ.கா.தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான், பிரதிய மைச்சர் முத்துசிவலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் போன்றோர் பிரதமருக்குத் தமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துவிட்டு உடனடியாக அங்கிருந்து திரும்பி விட்டனர்.

ஐ.தே.கவின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.வேலாயுதம் பங்கு பற்றும் எந்த நிகழ்விலும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### தும்பளை-மூர்க்கம் கடலில்

## குளிக்கச் சென்ற இளைஞர் இருவர் சுழியில் சிக்கிப் பலி!

வடமராட்சி,ஜன.16

தும்பளை - மூர்க்கம் கடலில் குளித்துக்கொண்டிருந்த இரு இளைஞர்கள் சுழியில் சிக்கி மரணமானார்கள்.

நேற்று முற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அல்வாய் கிழக்கைச் சேர்ந்த பேரானந்தன் உமாசுதன் (வயது 30), ஸ்ரீபால கணேசமூர்த்தி - சுதாகர (வயது25) ஆகிய இருவருமே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர்.

இளைஞர்கள் சிலர் இணைந்து வல்லிபுரக்கோயிலுக்குச் சென்றுள்ளனர். வழிபாட்டை முடித்துக்கொண்டு திரும்பும் வழியில் அவர்கள் தும்பளை, மூர்க்கம் கடலில் சென்று குளித்ததாகவும். அவர்களில் மூவர், திடீரென அலையினால் இழுத்துச்செல்லப்பட்டனர் என

(12ஆம் பக்கம் பார்க்க)

## மூத்த தளபதி கேணல் கிட்டுவின் 11 ஆவது நினைவுதினம் இன்று

### வல்வெட்டித்துறையில் பிரதான நிகழ்வு

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் பதினொராவது நினைவு தினம் இன்று வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கடந்த 1993ஆம் ஆண்டு சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து உயிர்த்தியாகம் செய்த இவர்களின் நினைவு தினத்தையொட்டி குடாநாட்டில் நினைவுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. வீதிகள தோறும் நினைவுப்பதாகைகளும் கட்டப்பட்டுள்ளன.

பிரதான நினைவுநிகழ்வு வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தீருவில் சதுக்கத்தில் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறும்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஏர்க்கு வாணம் தாக்கியதால் நேற்றும் ஒருவர் பார்வைஇழப்பு

யாழ்ப்பாணம்,ஜன.16

பொங்கல் கொண்டாட்டத்திற்காக இளைஞர்களால் கொளுத்தப்பட்ட ஏர்க்கு வாணத்தால் குடும்பப் பெண்ஒருவர் ஒரு கண்பார்வையை இழந்தார். வேறு இரு இடங்களில் இடம்பெற்ற பட்டாசு வெடிச்சம்பவங்களில் இரண்டுவயதுக் குழந்தை உட்பட இருவர் கண்ணில் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் - கொட்டடி முதததமிழ் வீதியிலுள்ள கைஒழுங்கை ஒன்றினுள் நேற்றுக்காலை 9 மணியளவில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் அப்பகுதியைச்சேர்ந்த குணரத்தினம் நிஷாநதினி (வயது25) என்ற 5 பிள்ளைகளின தாய் தனது கண்பார்வையை இழந்து படுகாயமடைந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மோ. சைக்கிள் சோதனை அடுத்த வாரம்முதல் தீவிரம்


### பலாலிப்படைத் தலைமையகம் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.16.

குடாநாட்டில் அடுத்தவாரம் முதல மோட்டார் சைக்கிள் சோதனை நடவடிக்கைகளை பொலீஸார் தீவிரப்படுத்தவிருக்கின்றனர்.

குடாநாட்டில் அதிகரித்துவரும் சட்டவிரோத செயல்களைத் தடுக்கும் நோக்குடனேயே மேற்படி நடவடிக்கை மேற கொள்ளப்படவிருப்பதாக யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி அலுவலகம் அறிவித்துள்ளதாக பலாலியிலுள்ள பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் விடுத்த செய்திக்குறிப்பில் தெரி

(12ஆம் பக்கம் பார்க்க)




சில விநாடிகளில் நீங்களும் ஸ்பீட் லோனை பெற்றுக்கொள்ளலாம். விபரங்களுக்கு அருகிலுள்ள NSB கிளைக்கு விரையுங்கள்.

ஸ்பீட் லோனின் முக்கியத்துவம்: * வைப்புத் தொகையில் 90% வரை * ஆகக் குறைந்த வட்டி வீதம்.

ஸ்பீட் லோன் | NSB

# அரசின் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் குறித்து

# விடுதலைப் புலிகள் அதிருப்தி தெரிவிப்பு

இன்றைய அரசியல் நிலைமை தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் வைத்து 'உதயனு'க்கு பிரத்தியேக செவ்வி வழங்கியிருந்தார். அதன் ஒரு பகுதி நேற்று வெளியாகியது. எஞ்சிய பகுதி இன்று பிரசுரமாகின்றது.



★ கேள்வி:- ஜனாதிபதி இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச செய்கிறார் என அறிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் தமிழர்களைப் பாதிக்குமா?

● பதில்- வடக்கு-கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசம் எமது மக்களுக்குச் சொந்தமானது. ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பூர்வீகமாக நாம் வாழ்ந்துவரும் மண் இது. இந்த மண்ணில் தமிழத்தரப்பின் - எமது மக்களின் - அங்ககாரமோ இணக்கப்பாடோ இல்லாமல் செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் செல்லுபடியற்றது என்றுதான் நாங்கள் கருதுகின்றோம்.

இந்த மண்ணுக்கு உரித்தானவர்களுடன் பேசாமல் செய்யப்படும் எந்த ஒப்பந்தமும் செல்லுபடியான ஒப்பந்தமாக இருக்காது.

இங்கு இணக்கப்பாடு ஒன்று ஏற்பட்டு, தீர்வு ஒன்று எட்டப்பட்டு அதன் மூலம் தமிழர் தரப்புடன் பேசி செய்யப்படும் ஒப்பந்தங்கள்தான் மக்களால் ஏற்கப்படும். இதைவிடுத்து இலங்கை அரசு செய்துகொண்டு போகும் ஒப்பந்தங்கள் குறித்து சர்வதேச சமூகம் விழிப்பாக இருக்க வேண்டும்.

இந்த மண் தமிழர்களுக்குச் சொநதமானது என்பது சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாகத் தெரிய வேண்டும். தமிழரின் இணக்கப்பாடோ, அஙகீகாரமோ இன்றி இந்த ஒப்பந்தங்கள் செய்யப்படுகின்றன என்பதையும், சிங்கள தேசமும் பேரினவாத சகதிகளும் சிங்கள அரசுகளும் இதன மூலம் தமிழர்களை ஏமாற்றுகின்றன என்பதையும் சர்வதேச சமூகம் உணர வேண்டும்.

இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்வதை நோக்கும் போது, இலஙகை அரசு எமக்கு இன்னொரு பூச்சாண்டி காட்டுகின்றது என்றுதான் கூறவேணடும். இலங்கை அரசினர் யுத்தத்தில் தோற்றார்கள்; பின்னடைவைச் சந்தித்தவர்கள். இதன் காரணமாக தமிழ் மக்களுக்கு நியாயமான உரிமையை வழங்க வேண்டிய நிர்ப்பநதம் அவர்களுக்கு இருக்கின்றது. இதில் இருந்து தப்புவதற்காக, சர்வதேச சமூகத்துடன் ஒப்பந்தம் என்றும் சர்வதேச பாதுகாப்பு வலைப் பின்னல் என்றும் கூறி சர்வதேச சமூகத்தை எமது பிரச்சினையில் வலிந்து இழுக்க முனைகின்றனர். இதனால், உருவாகும் சிக்கல் சமாதானத்தை மேலும் நெருக்கடி நிலைக்குள் தள்ளுமே தவிர சுமுகமான - அமைதி நிலை - இயல்பு நிலையை இங்கு கொண்டுவரும் என நாம் நம்பவில்லை.

சர்வதேச சமூகம் இந்த விவகாரத்தில் விழிப்பாகவும் தெளிவாகவும் இருக்கும் என நம்புகிறோம்.

இந்தியாவும் தெளிவான, சரியான முடிவுகளை எடுக்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம். சந்திரிகாவின் ஒரு தலைப்பட்சமான அறிவிப்புக்களை மட்டும் வைத்துக்கொண்டு உடனடியாக இது குறித்துக் கருத்துக் கூறமுடியாது. எமது பொதுவான நிலைப்பாட்டையே நான் கூறியுள்ளேன.

★ கேள்வி:- இலங்கையில் தேர்தல் நடந்தால் அது விடுதலைப் புலிகளுக்கு வாய்ப்பாக அமையும் என ஜனாதிபதிக்கு இந்தியாஆலோசனை கூறியுள்ளது என வெளிவரும் செய்திகள் குறித்து...?

● பதில்- ஜனாதிபதிக்கு இந்தியா ஆலோசனை கூறியதாக செய்தி ஊடகங்களே தெரிவித்துள்ளன. அண்மைக் காலமாக சந்திரிகாவும் தென்னிலங்கையில் உள்ள குழப்பகரமான சக்தியினரும் இந்தியா பற்றிய செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். இந்தியாவின் அதிகார பூர்வமான குரல் வெளிவரும் போதுதான் நாம் எமது கருத்தைத் தெரிவிக்கலாம்.

தேர்தல் நடந்தால் என்ன நடக்காவிட்டால் என்ன ஒட்டு மொத்தமாக வடக்கு-கிழக்கில் வாழும் அனைத்து மக்களினதும் ஏகப் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள்தான். யுத்தம் நடந்தால் என்ன யுத்தம் நிறுத்தப்பட்டு அரசியல் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டால் என்ன விடுதலைப் புலிகளை எம் பிரதி நிதிகளாக தமிழ் மக்கள் எப்போதோ அங்கீகரித்து விட்டார்கள்.

பல வருடங்களுக்கு முன்னரே தங்கள் தலைமை எது என்பதையும் தங்களின் விடுதலைக்காக - சுதந்திரத்திற்காக - உரிமைக்காகப் போராடும் அமைப்பு எது என்பதையும் தமிழ்மக்கள் உணர்ந்துவிட்டார்கள்.

இறுதியாக நடந்த தேர்தலிலும் அதனைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளார்கள். ஆகவே, தேர்தல் நடந்தால் விடுதலைப் புலிகள் வலுப்பெற்று விடுவார்கள் என்பதோ, தேர்தல் நடக்காவிட்டால் புலிகள் பலம் இழந்து விடுவார்கள் என்பதோ அர்த்தமற்ற செய்தி என்றுதான் கருதுகின்றேன்.

தமிழீழ விடுதலைப் புலிகளையும் அதன் தலைவரையும் எமது மக்கள் தங்களது தலைமையாகவும் தங்களது விடுதலை அமைப்பாகவும் எப்போதே ஏற்றுவிட்டார்கள்.

★ கேள்வி:- தேர்தல் ஒன்று இடம பெறும் பட்சத்தில், விடுதலைப் புலிகள் அத் தேர்தலில் நேரடியாகப் பங்கு பற்றுவார்களா?

● பதில்:- தமிழீழ விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், நாடாளுமன்றம் சென்று எமது மக்களின் உரிமையைப் பெறலாம் என்பதை நாம்எப்போதோ நிராகரித்துவிடோம். விடுதலைப்புலிகள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டு இலங்கை நாடாளுமன்றுக்குப்போய், எமது மக்களின் உரிமையைப்பெறலாம் என்பது ஒரு பகற்கனவு. அப்படியான சேற்றுக்குள் விடுதலைப் புலிகள் கால் வைப்பார்கள் என்று இப்போது நான் நம்பவில்லை. ஆனால், எதிர்காலத்தில் ஏற்படுகின்ற அரசியல் மாற்றங்களைப் பொறுத்து, எப்படியான முடிவுகளை எடுப்போம் என்று அந்த நேரத்தில்தான் கூறமுடியும்

★ கேள்வி:- அப்படியாயின் தேர்தலில் தனியான ஓர் அமைப்புக்கு ஆதரவு கொடுப்பீர்களா?

● பதில்:- தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், விடுதலைப் புலிகளின் கொள்கையை ஏற்றுக்கொண்டு, விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக அங்கீகரித்து தேர்தலில் நின்று வெற்றிபெற்று, நாடாளுமன்றததுக்கும் போயிருக்கிறார்கள். அவர்கள் தமது கடமையை ஓரளவு சரிவர செய்து கொண்டிருக்கிறார்கள் என நம்புகிறேன். தேர்தல் வரும்போது அதுபற்றிய முடிவுகளை நாம் எடுப்போம்.

★ கேள்வி:- ஐரோப்பிய நாடுகளுக்கு தாங்கள் விஜயம் மேற்கொள்வது குறித்து....?

● பதில்:- எதிர்காலத்தில் எமது அரசியல் குழுவைக் கூட்டி, புதிய தந்திரோபாயங்கள், சமாதான முயற்சியை முன்கொண்டு செல்வதற்கான வாய்ப்புகள் ஆகியன தொடர்பாக நாம் கலந்துரையாடல்களை நடத்தவிருக்கின்றோம்.

சட்ட நிபுணர்கள், அரசியல விவகாரக் குழுவினர் ஆகியோருடன் அடுத்த மாதத்தில் சந்திப்புகளை நடத்த விருக்கின்றோம். இதற்காக சில நாடுகளுக்குச் செல்ல விருக்கின்றோம். அது தொடர்பாக இன்னமும் முடிவு செய்யவில்லை

எமது நிலைப்பாடுகள் தொடர்பாக சில நாடுகளுக்கு விளக்கம் அளிக்கும் நோக்கம் உண்டு. அது பற்றிய விவரங்களை சில தினங்களில் அறிவிப்போம்.

★கேள்வி:- பாதுகாப்பு அமைச்சு பிரதமர் கைகளில் இருக்கும்போது நீங்கள் வெளிநாட்டுக்குச் சென்றீர்கள். தற்சமயம பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியின் கைகளில் உள்ளது. இதன் காரணமாக விஜயத்திற்கு சிக்கல் ஏதும் ஏற்படாதா?

● பதில்- எம்மைப் பொறுத்த வரை புரிந்துணர்வு உடன்பாடு செம்மையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது பாதுகாப்பு உத்தரவாததத்துக்கு கண்காணிப்புக்குழுவினர், சர்வதேச அனுசரணையாளர்கள் இருக்கின்றனர்.எமது போக்குவரத்துகதான முழுப் பாதுகாப்பையும் நோர்வேத்தரப்பு உத்தரவாதப்படுத்துகின்ற நிலையில் இந்த விடயத்தில் நாம் அச்சப்படத் தேவையில்லை எனக் கருதுகின்றேன்.

சந்திரிகா அம்மையாரும் யுத்த நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகிக் கொள்வதாக அறிவிக்கவில்லை. இந்நிலையில், நோர்வேத்தரப்பு எமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதால், இதைப்பற்றிச் சிந்திக்கவே தேவையில்லை.

★கேள்வி:- இந்திய வர்த்தகர்கள் மற்றும் 'றோ' உளவாளிகள், இந்திய மீனவர்கள், இலங்கை உளவாளிகள் போன்றோரை நீங்கள் கைது செய்து தடுத்து வைத்துள்ளீர்கள் என்று தகவல்கள் வெளியாகின்றன. அத் தகவல்களில் உண்மை உண்டா?

● பதில்:- மிகத் தவறான தகவல்கள் அவை. இந்திய வர்த்தகர்களையோ மீனவர்களையோ உளவாளிகளையோ எவரையும் புலிகள் கைது செய்யவில்லை.

★ கேள்வி:- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுக்கும் - புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்யப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை செயலிழந்துவிட்டது எனக் கூறியுள்ளீர்கள். இருதரப்புக்குமிடையில் மீண்டும் உடன்பாடு ஒன்றை எட்டுவதற்கு பேச்சு நடத்தும் சாத்தியம் உள்ளதா?

● பதில்:- இந்த உடன்பாட்டில் இருந்து ஹக்கீமே விலகிவிட்டார். இந்த உடன்பாடு தொடர்பாக விமர்சனங்களை வெளியிட்டு, அதில் இருந்து விலகிக்கொள்வதற்கான பல அறிவிப்புக்களை அவரே வெளியிட்டுள்ளார். இந்த உடன்பாடு சரிவர நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும் செயலிழந்து போய்விட்டது என்றும் அவர் பலதடவைகள் கூறிவிட்டார். இந்த உடன்பாட்டைச் செயலிழக்க வைத்தது நாங்கள் அல்லர்; முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்தான்.

முஸ்லிம்களின் ஏகப் பிரதிநிதியாக - ஒருசக்தியாக, ஸ்ரீலங்கா முஸலிம் காங்கிரஸ் இருந்தபோதுதான் இந்த உடன்பாட்டை நாங்கள் செய்தோம். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் உட்பட பலர் அக்கட்சியிலிருந்து வெளியேறப்பட்டமையும் அக்கட்சி பிளவுபட்டமையும்தான், உடன்பாடு செயலிழந்தமைக்கு காரணம்.

ஒட்டுமொத்த முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய நிலையில்தான், இனி நாங்கள் முஸ்லிம் மக்கள் தொடர்பான விடயங்களில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளமுடியும். அதற்கான முயற்சிகளில் நாங்கள் இப்போது ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம். மிக விரைவில் அந்த விவரங்களை வெளியிடுவோம்.

★ கேள்வி:- குடாநாட்டில் இயல்பு நிலையை கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்போவதாக யாழ்.படைகளின் தளபதி கருத்து வெளியிட்டுள்ளார். அது குறித்து...?

● பதில்:- குடாநாட்டில் பல்லாயிரக்கணக்கான மக்களின் அவலங்களைக் களைய உயர்பாதுகாப்பு வல யங்களை நீக்கவேண்டும். மக்கள் நெருக்கமாக வாழும் இடங்களில் உள்ள முகாம்களை அகற்றி அங்கிருந்து இராணுவம் உடன் விலகவேண்டும். இந்த ஏற்பாட்டை அவர் செய்வாரானால், இயல்பு நிலைக்கு உதவும் அவரது செய்தியை நம்பக்கூடியதாக இருககும்

-இப்படி அவர் கூறினார். (உ-ம-3)

## செயலாற்றுகைத்தரக் கணிப்பீட்டின்படியே ஆசிரியர்களுக்கான வருடாந்த சம்பள உயர்வு

### முன்னைய சுற்றறிக்கைகள் அமைச்சினால் ரத்து

அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்களின் வருடாந்த சம்பள உயர்வை ஆசிரிய செயலாற்றுகைத் தரக் கணிப்பீட்டின் அடிப்படையில் வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஏற்கனவே வெளியிடப்பட்ட சுற்றறிக்கைகள் யாவும் உடனடியாகச் செயற்படும் வண்ணம் ரத்துச் செய்யப்படுவதாகவும் புதிய நடைமுறைகளின் அடிப்படையில் ஆசிரியர்கள் தரங்கணிக்கப்பட்டு வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான புதிய சுற்றறிக்கையொன்றினை கல்வி அமைச்சின் பணிப்பாளர் எம்.டி.ஜ.என். சிறிவர்த்தன சகல வலயக் கல்விப்பணிப்பாளர்கள், மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அரச ஊழியர்களின் வருடாந்த சம்பள உயர்வு, உரிய சம்பள உயர்வு வழங்கப்படும் காலத்தினுள் ஊழியரின் செயலாற்றுகை தொடர்பாக நடத்தப்படும் முறையான கணிப்பீட்டின் அடிப்படையிலேயே வழங்கப்படவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஆசிரியர்களின் தரப்படுத்தலானது பாடசாலைகளில் அமைக்கப்படும் தரப்படுத்தல் சபையொன்றின் மூலம் இடம்பெறவேண்டும். பாடசாலை அதிபரைத் தலைவராகவும் இருஆசிரியர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட தரப்படுத்தல் சபையொன்றினை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் சகல பாடசாலைகளிலும் அமைக்கவுள்ளனர்.

ஓர் ஆசிரியர் தனது செயலாற்றுகைத் தரக்கணிப்பீடு தொடர்பாக திருப்திகாணாத பட்சத்தில் அது பற்றி வலயக்கல்விப் பணிப்பாளரைத் தலைவராகக் கொண்ட மேன்முறையீட்டுச் சபையில் மேன்றையீடு செய்யமுடியும் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்து.

### திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆதரவுடன் 'அபர்ணா சென்னின்' நெறியாள்கையில் உருவாக்கப்பட்ட 'மிஸ்ரர் அன்ட் மிஸிஸ் ஐயர்' என்ற ஆங்கிலப்படம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிச் கப்படும்.

படக்காட்சியின் இறுதியில் எழுத்தாளர் சு.யேசுராசா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் கலந்துரையாடல் இடம்பெறும். ஆர்வமுள்ள எவரும் பங்குகொண்டு பயன பெறலாம் என்று ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் இணைப பாளர் தெரிவித்துள்ளார். (ம-5)

## பொங்கல் பொருள்கள் வாங்கச் சென்றவர் மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தார்

இணுவில்,ஜன.16

பொங்கலுக்கு பொருள்கள் வாங்குவதற்காகச் சென்றவர் தனது "சாளி" மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்த சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 8.00 மணியளவில் திருநெல்வேலிச் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

வர்த்தக நிலையத்திற்கு முன்பாகத் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு பொருள்களை வாங்கிவிட்டு திரும்பிப் பார்த்தபோது மோட்டார் சைக்கிள் மாயமாகி இருந்தது.

கோண்டாவில் வடக்கு ஸ்ரீவாகீஸ்வரியைச் சேர்ந்த திசைவீரசிங்கம் தேவராசா என்பவரே மோட்டார் சைக்கிளை பறிகொடுத்தவராவார். இதுபற்றி கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.(ம-49)

## வலி.வடக்கில் நாளை கலாசாரப் பெரு விழா

யாழ்ப்பாணம்,ஜன.16

வலிகாமம் வடக்கு கலாசாரப் பேரவையின் அளவெட்டி, பன்னாலை, இளவாலை கிராமங்கள் இணைந்து நடத்தும் வருடாந்த கலாசார விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அளவெட்டி ஸ்ரீசுப்பிரமணிய சுவாமிகள் ஞாபகார்த்த கலாசார நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பேரவைத் தலைவர் வை.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்து கொள்வார்.

ஆசியுரையை சி.விநாசித்தம்பியும் சிறப்புரைகளை வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா, தெல்லிப்பழைப் பிரதேசப் பொறுப்பாளர் ஜெனா மற்றும் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ப.திலகநாயகம் ஆகியோரும் நிகழ்த்துவர்.

அதனைத் தொடர்ந்து முன்பள்ளி அறநெறிப்பாடசாலைகள் மற்றும் பாடசாலை மாணவர்களின் நடனம், கோலாட்டம், கரகாட்டம் மற்றும் நாடகங்கள் போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

இறுதியாக இப்பிரதேசத்திற்குட்பட்ட கலைஞர்கள் கலைச்சுடர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படும் கலைஞர் விவரம் வருமாறு:-

கநாகலிங்கம் (இலக்கியம்), இகேதஸ்வரன் (நாதஸ்வரம்), வி.கே.நடராசா (இசை), தெட்சணாமூர்த்தி (ஓவியம்), ஐ. சிவபாதம் (மிருதங்கம்), வ. செனகரட்ணம் (நாடகம்), மா. தேவராசா(நாடகம்),க. அமரசிங்கம் (நாடகம்) (ம-5-7)

### பிரதேசமட்டப் போட்டிகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.16

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையிலான இவ்வாண்டுக்குரிய விளையாட்டுப்போட்டிகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

ஆண், பெண்களுக்கான துடுப்பாட்டப்போட்டிகள் நாளை சனிக்கிழமை ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்திலும்.

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை ஆண், பெண்களுக்கான கரபந்தாட்டப்போட்டிகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும் நடைபெறும். பெண்களுக்கான துடுபபாட்டம் மற்றும் கரப்பந்தாட்டப் போட்டிகள் இம் முறையே முதல் முறையாக மேற்படி பிரதேச செயலர்பிரிவில் ஆரம்பமாகின்றன என உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் அறிவித்துள்ளார்.(எ)

# ஈராக்கியர்கள் மீண்டும் மாபெரும் ஆர்ப்பாட்டம்!

ஈராக்கிய இடைக்கால நிர்வாக சபையின் செயற்பாடுகளைக் கண்டித்து பத்தாயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் பிரிட்டிஷ் படையினர் நிலை கொண்டிருக்கும் பஸ்ரா நகரில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தேர்தல் நடத்துவது குறித்து இடைக்கால சபை தீவிரமாக ஆய்ந்து வரும் இந்த நிலையில் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே மேற்படி ஆர்ப்பாட்டம் நடந்தது.

சதாம் ஹுசைனுக்கு ஆதரவான ஷியா முஸ்லிம்களே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். எதிர்வரும் ஜூன் மாதம் ஈராக்கியர்களிடமே ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பதற்கு அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை இடைக்கால நிர்வாக சபை தீவிரமாக மேற்கொண்டு வருகிறது.

தேர்தலில் ஷியா முஸ்லிம்களுக்கு போதுமான இடம் வழங்கப்படவில்லை என்றும் அமெரிக்கா முதலில் நாட்டிலிருந்து வெளியேற வேண்டுமெனவும் ஆர்ப்பாட்டம் நடத்தியோர் கோஷமெழுப்பினர்.

இதற்கிடையே - அமெரிக்கப் படையினரை குறிவைத்து நடத்தப்பட்ட காக் குண்டுத் தாக்குதலில் இரண்டு ஈராக்கியர்கள் கொல்லப்பட்டனர்; மேலும் இருவர் காயமடைந்தனர்.

பாத் கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் சிலர் நேற்றுமுன்தினம் நடந்த தேடுதலில் கைது செய்யப்பட்டிருப்பதை யடுத்தே, அப்பகுதியில் மேற்படி தாக்குதல் நடந்திருப்பதாக படையினர் தெரிவித்தனர். (ஒ)


ஈராக்கில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில்...

# செவ்வாய்ப் பள்ளத்தை ஆராய 'ஸ்பிரிட்' தயார்!

செவ்வாய்க் கிரகத்தில் உள்ள பெரும் பள்ளத்தை ஆராய 'ஸ்பிரிட்' ஆய்வு வாகனம் தயாராகின்றது. தரையிறங்கிய தாய்க்கலத்திலிருந்து 'ஸ்பிரிட்' ஆய்வுவாகனம் தற்போது வெளியேறி சுயாதீனமாகத் தற்போது செவ்வாயில் நகரத் தொடங்கிவிட்டது.

இது தரையிறங்கிய இடத்திலிருந்து சுமார் 260 மீற்றர்கள் தூரத்தில் 200மீற்றர்கள் விட்டமுடைய பெரும்பள்ளம் ஒரு காலத்தில் தண்ணீர் நிறைந்த ஏரியாக இருந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஆகவே, இந்தப் பள்ளத்தை ஆராய்வதில் விஞ்ஞானிகள் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இந்தப் பள்ளத்தை நோக்கி 'ஸ்பிரிட்' நகர்த்தப்படவுள்ளது.

ஆனாலும், செவ்வாயின் தரைப்பகுதியில் உள்ள பாறைகளிலோ அல்லது வேறேதாவது தடைகளிலோ 'ஸ்பிரிட்' மோதி சேதமடைய வாய்ப்புகள் உண்டு. இதனால், 'ஸ்பிரிட்' ஆய்வு வாகனத்தை 'ரிமோட்' கருவி மூலம் மிக மெதுவாகவே 'நாஸா' விஞ்ஞானிகள் நகர்த்துகின்றனர். இதன் காரணமாக 250மீற்றர் தூரத்தைக் கடந்து பள்ளத்தை அடைய 'ஸ்பிரிட்' வாகனத்துக்கு 6வாரங்கள் ஆகும் என்று கணிக்கப்பட்டுள்ளது. அது செல்லும் வழியில் கல் மற்றும் மண்ணை சோதனை செய்து முடிவுகளை பூமிக்கு அனுப்பும்.

செவ்வாயின் பள்ளத்தை ஆய்வு செய்த பின்னர் அங்கிருந்து 3கிலோ மீற்றாகள் தொலைவில் உள்ள குன்று ஒன்றை நோக்கி ஸ்பிரிட் ஆய்வு வாகனம் நகர்த்தப்படவுள்ளது. செவ்வாயில் 10நாள்களுக்கு முன்னர் தரையிறங்கிய 'ஸ்பிரிட்' ஆய்வு வாகனம் மூலம் மூன்று மாதங்கள் ஆய்வுகளை மேற்கொள்ள 'நாஸா' விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். (ஒ)

# 'சார்ஸை' சாதாரணமாக்கும் பறவைக் காய்ச்சல் நோய்!

## மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை

கோசினின்சிற்றி,ஜன.16

'சார்ஸ்' நோயை விடக்கொடிய நோயான 'பறவைக்காய்ச்சல்' குறித்து மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

தென்கொரியா, வியட்நாம், ஜப்பான் உள்ளிட்ட கிழக்காசிய நாடுகளில் பறவைகளை குறிப்பாக கோழிகளை ஒரு வித காய்ச்சல் பீடித்து வருகின்றது. இந்த நோயால் பீடிக்கப்பட்டு லட்சக் கணக்கான கோழிகள் இறந்துவிட்டன.

இந்த நிலையில், வியட்நாமில் ஒருவகை காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 9பேர் இதே வகைக் காய்ச்சலால் பாதிப்படைந்துள்ளனர். இவர்களைத் தாக்கியிருப்பதும் பறவைக் காய்ச்சல் நோயாக இருக்கலாம் என்று மருத்துவர்கள் சந்தேகிக்கின்றனர். இது குறித்த சோதனைகளையும் அவர்கள் நடத்தி வருகின்றனர்.

பறவையினங்களைப் பாதித்த காய்ச்சலுக்கும் வியட்நாமில் மனிதர்களைப் பீடித்துள்ள காய்ச்சலுக்கும் இடையே குணம்குறிகள் ஒத்துப்போவதாகக் கூறப்படுகிறது. மனிதரில் ஒருவரிடமிருந்து ஒருவருக்கு இந்த நோய் தொற்றுவதில்லை என்றே நம்பப்படுகிறது.

ஆனால், பறவைகளைத் தாக்கும் காய்ச்சல் மனிதர்களைத் தாக்கி, அதிலும் அது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குத் தொற்றக்கூடியதாக இருந்தால், பாரிய உயிரிழப்புகளை மனித குலம் சந்திக்க நேரிடும் என்று மருத்துவ நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இத்தகைய நிலை ஏற்பட்டால், சீனா உட்பட மத்திய ஆசிய நாடுகளைக் கலக்கிய 'சார்ஸ்' நோயை விட பறவைக் காய்ச்சல் கொடிய நோயாக மாறும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். (ஒ)

# ஷெரோன் அதிகாரத்தில் இருக்கும் வரை இஸ்ரேல் - சிரியா நல்லுறவுக்கு இடமில்லை!

## சிரியா நாட்டுப் பிரதமர் தெரிவிப்பு

டமஸ்கஸ்,ஜன.16

இஸ்ரேலியப் பிரதமராக ஏரியல் ஷெரோன் பதவி வகிக்கும் வரை இஸ்ரேலுடன் நல்லுறவு ஏற்படாது.

- இவ்வாறு சிரியா நாட்டுப் பிரதமர் நாஜி அல் ஒடாரி தெரிவித்தார்.

ஷெரோன் தலைமையிலான பாசிய நிர்வாகத்துடன் பேசி சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற எண்ணம் தனக்குக் கிடையாது என்றும் பிரதமர் நாஸி தெரிவித்தார்.

ஜெருசலேம் நகருக்கு விஜயம் செய்யுமாறும், அங்கு சமாதானப் பேச்சை நடத்தலாம் என்றும் சிரியாவுக்கு இஸ்ரேல் இந்த வார ஆரம்பத்தில் அழைப்பு விடுத்திருந்தது. இந்த அழைப்பை சிரியா நிராகரித்திருந்தது.

இந்த நிலையிலேயே சிரியப் பிரதமர், இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனை கடுமையாக விமர்சித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

1967ஆம் ஆண்டு நடந்த இஸ்ரேல் - அரபு யுத்தத்தில் சிரியாவிடமிருந்து கோலான் குன்றுப் பகுதியை இஸ்ரேல் கைப்பற்றியது. இந்தப் பகுதியை மீண்டும் கையளிக்குமாறு இஸ்ரேலை சிரியா வற்புறுத்துகிறது. இது தொடர்பாக இருநாடுகளிடையேயும் இடம்பெற்ற பேச்சுகள் நான்கு ஆண்டுகளுக்கு முன் தோல்வியடைந்தன.

சிரியாவும் இஸ்ரேலும் இப்போதும் கூட மறைமுக யுத்தத்தில் ஈடுபட்டு வரும் நாடுகளாகும். இஸ்ரேலிய எல்லைப் பகுதிகளில் வன்முறைத் தாக்குதல்களை நடத்திவரும் லெபனானிய 'ஹெஸ் பொல்லா' என்ற தீவிரவாத அமைப்புக்கு சிரியா உதவுவதாகவும பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு அது ஆதரவளிப்பதாகவும் இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருகின்றது.

இருநாடுகளுக்கு இடையிலான முறுகல் நிலையைத் தணிப்பதற்கு நிபந்தனையற்ற பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று இஸ்ரேல் கூறுகிறது. ஆனால், கோலான் குன்று விவகாரத்தை முன்வைத்தே பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று சிரியா வலியுறுத்துகிறது.

இதற்கிடையில், கோலான் குன்றுப் பகுதியில் யூதக்குடியிருப்புகளை மேலும் விஸ்தரிக்கப் போவதாக இஸ்ரேல் சமீபத்தில் அறிவித்தது. இந்த அறிவிப்பு சிரியாவை கோப மூட்டியது. இதனையடுத்து, இருநாடுகளிடையேயான முறுகல்நிலை மீண்டும் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. (ஒ)

# இந்தியா - பாக். இடையே மீண்டும் ரயில் போக்குவரத்து

லாகூர்,ஜன.16

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான போக்குவரத்து இரண்டு வருடங்களுக்குப் பிறகு நேற்று மீண்டும் ஆரம்பமானது.

பாகிஸ்தானில் உள்ள லாகூரிலிருந்து இந்த 'சம்ஜுக்தா' விரைவு ரயில நேற்றுக்காலை உள்ளூர் நேரப்படி 8.30 மணிக்கு புறப்பட்டது.

10 பெட்டிகள் மற்றும் 65 பயணிகளுடன் இந்தியாவுக்குப் புறப்பட்ட சம்ஜுக்தா விரைவு ரயிலை பாகிஸ்தான் ரயில்வே திணைக்களத் தலைவர் குர்ஷித் கான் மற்றும் பயணிகளின் உறவினர்கள் வழியனுப்பி வைத்தனர்.

இந்தியாவில் வாகா எல்லை அருகே உள்ள அட்டாரிக்கு இந்த ரயில் வந்து சேரும்.

இந்த ரயில் வாரத்தில் இரண்டு நாள்கள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இருநாடுகளிடையேயும் உள்ள முறுகல் நிலையைத் தணிக்கும் முயற்சி சமீபகாலமாக புதிய வேகத்துடன் முன்னெடுக்கப்படுவதையடுத்தே மீண்டும் நேற்று இந்த ரயில் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டது. (ஒ)

## உலக அரங்கில்

# மனைவியை அடிக்கும் முறை குறித்து நூல் எழுதிய மதகுருவுக்குச் சிறை!



காயங்கள் ஏற்படாமலும், குற்றச் சாட்டுக்களில் சிக்காமலும் மனைவியை அடிப்பது எப்படி? என்று கணவன்மாருக்கு அறிவுரை கூறும் புத்தகத்தை எழுதிய இஸ்லாமிய மதகுரு ஒருவருக்கு ஸ்பெயின் நாட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

மொஹமட் கமால் முஸ்தபா என்ற இந்த மதகுரு மூன்று ஆண்டுகளின் முன்னர் இந்தப் புத்தகத்தை எழுதி வெளியிட்டார். கீழ்ப்படியாத மனைவியை ஒழுக்கமுடையவளாக மாற்றும வழிகள் என்ற தலைப்பில் இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

மனைவியைக் கைகளிலோ கால்களிலோ மெல்லிய கம்பியால் அடித்தால் உடலில் காயமோ வடுவோ ஏற்படாது என்பது உட்பட மனைவியைத் தண்டிக்கும் பல வழிமுறைகள் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

இந்தப் புத்தகத்தைத் தடைசெய்ய வேண்டும் என்றும், இதனை எழுதிய மதகுரு தண்டிக்கப்படவேண்டும் எனறும் கோரி பெண்கள் அமைப்புகள் பலவும் 2000 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஸ்பெயின் நாட்டு நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டன. இந்த மனுக்களை விசாரித்த நீதிமன்றம், மதகுருவுக்கு 15 மாதங்கள் சிறைத் தண்டனையும் அத்துடன், 2 ஆயிரத்து 160 யூரோ (2 ஆயிரத 735 டொலர்கள்) அபராதமும் விதித்தது. இஸ்லாமிய சமய நூலான குர் ஆனில் உள்ளவற்றிற்கு விளக்கங்களை மட்டுமே தான் எழுதிப் புத்தகமாக வெளியிட்டதாக மதகுரு நீதிமன்றத்தில் வாதிட்டார். ஆனால், இந்த வாதத்தை நீதிமன்றம் நிராகரித்தது. (ஒ)

# சமாதான ஆர்வலர் மரணம்!

காஸா பிரதேசத்தில் கடந்த ஆண்டு ஸ்ரேலியப் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி சுயநினைவின்றி இருந்த பிரிட்டிஷ் சமாதான ஆர்வலர் மரணமடைந்தார்.

பிரிட்டனில் லண்டன் நகரைச் சேர்ந்த ரொம் ஹர்ண்டல் (வயது 22) என்பவரே இறந்த வராவார்.

இவர் சர்வதேச இணக்கப்பாட்டு அமைப்பில் உறுப்பினராவார். இந்த அமைப்பு பலஸ்தீனப் பிரதேசத்தில் வன்முறைகளைத் தடுக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளது. ரொம் ஹர்ண்டல் இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தார்.

பலஸ்தீன அகதி முகாம் ஒன்றில இவர் பிரசார நடவடிக்கையில் கடந்த ஆண்டு ஈடுபட்டிருந்த சமயம் ஸ்ரேலிய சிப்பாய் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகினார். அன்று முதல் 'கோமா' நிலையில் சிகிச்சை பெற்றுவந்தார். சிகிச்சை பயனளிக்காததால் மரணமடைந்தார். (ஒ)

# தனித்துப் போட்டியிட பா.ஜ.க.முஸ்தீபு; அ.தி.மு.க.அழைப்புக்கும் எதிர்பார்ப்பு

தமிழகத்தில் தனித்துப் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களில் ஈடுபடத் தொடங்கி இருக்கிறது பாரதீய ஜனதாக்கட்சி. கூட்டணி அமைக்க அ.தி.மு.கவிடம் இருந்து சமிக்ஞை ஏதும் வராத நிலையில், வாஜ்பாயை முன்னிலைப்படுத்தி தமிழகத்தில் தேர்தல் பிரசாரத்தை எதிர்வரும் 23 ஆம திகதி தொடங்குகிறது அந்தக் கட்சி.

தனித்துப் போட்டியிடுவதே சிறந்தது; பா.ஜ.கவின் பலத்தை நிரூபிக்க இதுவொரு பொன்னான வாய்ப்பு என்று ஒரு தரப்பு வாதிடுகிறது. கூட்டணி அமைத்துப் போட்டியிட்டாலும் பாஜகவுக்குக் கிடைக்கப்போவது 4 இடங்கள் தான். ஆனால், தனித்துப் போட்டியிட்டால் 40 லட்சம் வாக்குகளைப் பெற்று, தி.மு.க, அ.தி.மு.கவுக்கு அடுத்து மூன்றாவது பெரிய கட்சி என்பதை நிலைநாட்டலாம் என்பது அந்தத் தரப்பின் வாதம்.

ஆனால், அ.தி.மு.கவுடன் கூட்டுச் சேர்வது அவசியம் என்று வாதிடும் மற்றொரு தரப்பு, தனித்து நின்றால் பா.ஜ.க. கலகலத்துவிடும் என்று அஞ்சுகிறது. ஓரிரு தொகுதிகளைத் தவிர்த்து எங்குமே கட்டுப்பணம் வாங்கமுடியாது என்று கவலைப்படும் அத்தரப்பு, தனித்துப் போட்டியிடும் முடிவு தி.மு.க - காங்கிரஸ் கூட்டணியின் மாபெரும் வெற்றிக்கு வழிவிட்டதாகிவிடும் என்று கூறுகிறது.

தமிழகத்தில் ஒன்றேகால் லட்சமாக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை, இப்போது 8 லட்சமாக உயர்ந்திருக்கிறது. கட்சிக்குப் புதிதாக வந்தவர்களிடம், பா.ஜ.க வேட்பாளருக்குத் தேர்தல் பணியாற்றவேண்டும் என்ற உத்வேகம் இருக்கிறது. தனித்துப் போட்டியிடுவதையே தொண்டர்கள் விரும்புகிறார்கள் என்கிறார் ஒரு மூத்த நிர்வாகி.

மும்முனைப் போட்டியில் நாகர்கோவில், புதுக்கோட்டை போன்ற தொகுதிகளில் வெற்றிபெற்றுவிட முடியும். தமிழகத்தில் பெரிதாக வெற்றி பெறாவிட்டாலும் கூட வாஜ்பாய் ஆட்சி அமைவதில் சிக்கல் இருக்காது. ஆனால், தமிழகத்தில் 40 லட்சம் வாக்குகளைப் பெற்றால், 2006 சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.கவின் செல்வாக்கை உயர்த்திக் கொள்ள உதவும். அதன் மூலம் கட்சி வலுவாகக் காலுன்றிவிடும் என்றும் தமிழக பா.ஜ.கவினர் நம்புகின்றனர்.

# ஜெயலலிதாவின் ஜோதிட நம்பிக்கையால் கூட்டணி தொடர்பான முடிவில் தாமதம்

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாக அ.தி.மு.கவின் முடிவு இதுவரை தெளிவாக அறிவிக்கப்படவில்லை. ஜெயலலிதாவின் ஜோதிட நம்பிக்கையே இந்தத் தாமதத்துக்கு காரணம் என்று கூறப்படுகின்றது.

வாஸ்து சாத்திரம் முதல் கைரேகை வரை ஜோதிடங்களின் மேல் அபார நம்பிக்கை கொண்டவர் ஜெயலலிதா. ஜெயலலிதாவின் வாஸ்து சாத்திர ஜோதிடர் கூறியதாலேயே, சென்னை மெரினா கடற்கரையில் இருந்த கண்ணகி சிலை, லொறி மோதி வீழ்த்தி விட்டதாகக் கூறி அப்புறப்படுத்தப்பட்டதாக தமிழகத்தில் பேசப்படுகின்றது.

தனது ஜோதிட நம்பிக்கை காரணமாக மார்கழி மாதத்தில் ஜெயலலிதா முக்கிய முடிவுகளை எடுக்கமாட்டார் என்று கூறப்படுகின்றது. இதனாலேயே நாடாளுமன்றத் தேர்தல் குறித்தோ, கூட்டணிபற்றியோ எந்த ஓர் உறுதியான அறிவிப்பையும் அவர் வெளியிடவில்லை என்று கூறப்படுகின்றது.

தமிழ் மாதங்களில மார்கழி முடிவடைந்து நேற்றுத் தைமாதம் பிறந்துள்ளது. இதனால், அடுத்துவரும் ஓரிரு தினங்களில் தேர்தல் கூட்டணி தொடர்பாக ஜெயலலிதா தனது அறிவிப்பை வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

தி.மு.க.- காங்கிரஸ் கூட்டணி உறுதியாகிவிட்டநிலையில், அ.தி.மு.க. உடன் கூட்டணி அமைக்க பாரதிய ஜனதாக்கட்சியின் தேசியத் தலைமை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில், அடுத்த சில தினங்களில அ.தி.மு.கவின் வியூகம் தெளிவாகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ)

# ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணில் 24 - 12 - 1922

விண்ணில் 26 - 01 - 2003

## திருமதி சரவணமுத்து நாகம்மா

திதி:16.01.2004

ஆண்டொன்றாகியும் ஆறவில்லை எம்மது
ஆறுதலாய் நீ இருந்தாய் - அம்மா!
இன்று வெறுமையாய் நிற்கிறோம் உன் பிரிவால்
இனி என்றுன்னைக் காண்போம் - உன்
ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

"லஷ்மி இல்லம்",
நவிண்டில், கரணவாய் வடக்கு, கரவெட்டி. (27157)(34-14)

உன் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.


# கட்டுத்துப்பாக்கி வெடித்ததில் இளைஞர் காயம்!

யாழ்ப்பாணம், ஜன.16

கட்டுத்துப்பாக்கியை கத்தியால் அடித்தபோது அது வெடித்து எகிறி அடித்ததில் இளைஞர் முகத்தில் படுகாயமடைந்தார்.

வரணி, குடமியன் [illegible] முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு லோகேஸ்வரன் (வயது21) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பன்றி[illegible]க்காக வெடிமருந்து நிரப்பிவைக்கப்பட்ட 'இடியன்' என்று அ[illegible]படும் கட்டுத்துப்பாக்கி[illegible] காயமடைந்தவர் கனமான கத்தியால் அடித்துப் பார்த்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ம-15)

# திண்மக் கழிவு முகாமை பற்றிய விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், ஜன.16

பாடசாலை மாணவர்களுக்கிடையே திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வினை யாழ். மாநகர சபை ஏற்படுத்தவுள்ளது.

சபைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளிடையே திண்மக் கழிவுப் பொருள் பாவனையின் விளைவு தொடர்பாகவும், இதனால் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் தாக்கங்கள் தொடர்பாகவும் பாடசாலை அதிபரூடாக மாநகரசபை கருத்துக்களை வழங்கவுள்ளது.

(ம-6)

# அனலைதீவு தபால் நிலையத்துக்கு புதிய தபாலதிபர்

யாழ்ப்பாணம், ஜன.16

அனலைதீவு தபால் நிலையத்துக்கு தபால் அதிபர் தரம் IIஇல் உள்ள புதிய துபாலதிபர் ஒருவர் இன்று வெள்ளிக்கிழமை பொறுப்பேற்கவுள்ளார்.

நீண்டகாலமாக அனலைதீவு மக்கள் தமது தபால் நிலையத்திற்கு தபால் அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பிரதம தபாலதிபரிடம் கோரிவந்தனர். அதற்கு இணங்கவே அனலைதீவு தபால் நிலையத்திற்கு கே. தயாநிதி என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று யாழ்பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் ச.சிவராஜசிங்கம் தெரிவித்தார்.

(ம-6)


# மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...!

17-01-2004 முதல் 21-01-2004 வரை

இளைஞர்களே!
☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்
☆ நடுக்கம் ☆ நித்திரை குறைவு
என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?
கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்!
ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகளுக்கு:

பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hotline: 0777 569205
T.P.: 3181, 5399

(சி-32752) (21-14)


# பொது அறிவித்தல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குட்பட்ட சகல வர்த்தக நிலையங்களினதும் (சந்தைகள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட) நிறுவைகள், அளவைகள், நிறுக்கும் கருவிகள் அனைத்திற்கும் பின்வரும் திகதிகளில் யாழ்ப்பாணம் செயலகத்தில் காலை 9.00 மணிமுதல் பி.ப. 13.00 மணிவரை பரிசோதகரால் பரிசோதித்து முத்திரையிடப்படும் என மேலதிக அரச அதிபர் அவர்கள் அறிவித்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தை சகல வர்த்தக நிலையங்களும் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள.

திகதிகள்
19-01-2004
20-01-2004
21-01-2004
22-01-2004
23-01-2004

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
14-01-2004.

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்

(C/32793)(34-14)


# 3ஆம் ஆண்டு நினைவாக



மழலையாய் 07 ~ 10 ~ 1982

மாவீரராய் 16 ~ 01 ~ 2001

லெப்ரினன்ட்

## சுதாகரி/குறிஞ்சி

அரசகுமார் ஜெயசுதா

பள்ளியில் படித்திட்ட பாலகப் பருவத்திலே
பாயும் புலியாய் மாறினீர்களே! பலகளம் கண்டு
தாயகம் மீட்புக்காய் தமிழின விடிவிற்காய்
போராடிப் போராடி ஆகுதியாகிய மாவீரர்களே!
உங்கள் பாதங்களில் எம் கண்ணீர்ப்
பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

மேற்படி தினத்திலும் ஏனைய நாள்களிலும் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

இந்நாளில் தங்கள் நினைவால் அம்மா, அப்பா, அண்ணன், தம்பி மற்றும் அப்பம்மா, திருமதி அருளானந்தம் (கோண்டாவில்), அம்மம்மா திருமதி கணபதிப்பிள்ளை (நீர்வேலி), பெரியப்பா நவரட்ணம் குடும்பம் (கனடா), ராசன் சித்தப்பா குடும்பம் (ஜேர்மனி), மோகன் மாமா குடும்பம் (ஜேர்மனி), திருநாவுக்கரசு மாமா குடும்பம் (கோண்டாவில்), சந்திரன் சித்தப்பா குடும்பம் (ஜேர்மனி), மகேந்திரன் சித்தப்பா குடும்பம் (நீர்வேலி), அரசகேசரி மாமா (நீர்வேலி) தருமு மாமா (நீர்வேலி) ஆகியோர் துயருறுகின்றனர்.

என்றும் நினைவில்:
அப்பா: அரசகுமார்
அம்மா: செல்லம்மா
அண்ணா: ஜெயசுதன்.

நீர்வேலி மத்தி. (26944)(35-14)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி லோகநாயகி குகதாசன்

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட லோகநாயகி குகதாசன் 11-01-2004 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா குகதாசனின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி K.S.நாகலிங்கத்தின் அன்பு மகளும் காலஞ்சென்ற திரு.திருமதி V.S.கந்தையாவின் அன்பு மருமகளும் இராசரெத்தினம், கனகநாயகம், சண்முகலிங்கம், உலகநாதன், திருமதி சாவித்திரிதேவி மாணிக்கவாசகன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஸ்ரீதரன் (ஆஸ்திரேலியா), கெங்காதரன் (கனடா), ஸ்ரீரஞ்சனி (ஆஸ்திரேலியா), கனகேந்திரன் (கனடா), துஷ்யந்தி (கனடா), சிவப்பிரியா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் சந்திரபோஸ் (ஆஸ்திரேலியா), பங்கயற்செல்வி (ஆஸ்திரேலியா), சுகந்தி (கனடா), அனுஷா (கனடா), உமாமகேசன் (கனடா), சசிகுமார் (கொழும்பு) ஆகியோரின் மாமியாரும் மயுரன் பிரவீன், ஹரிஷ், பிருந்தா, அனிதா, உஷானி, சேயோன் ஜெனகன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17-01-2004) சனிக்கிழமை கனடாவில் நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

537, சிவன் கோவில் வீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம். (27189)(34-14)

தகவல்:
நா.சண்முகலிங்கம்
(சகோதரன்)

## குமாரசாமி தர்மகுலசிங்கம்

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் சங்கத்தானை சாவகச்சேரியில் வசித்தவருமான குமாரசாமி தர்மகுலசிங்கம் அவர்கள் 13.01.2004 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - பாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும் இளையதம்பி - சின்னம்மாவின் பேரனும் காலஞ்சென்ற மகாலிங்கம் (கணக்கப்பிள்ளை - சாவகச்சேரி) - கனகம்மா ஆகியோரின் மருமகனும் இந்திராவின் அன்புக் கணவரும் பூபாலசிங்கம் (கனடா) அன்னலெட்சுமி (கனடா), குமாரகுலசிங்கம் (ஏழாலை), இராசகுலசிங்கம் (நாதன் - கனடா), தனபாலசிங்கம் (கனடா), பாஸ்கரதேவி (கனடா), குணசிங்கம் (கனடா), காலஞ்சென்ற பாக்கியநாதன் ஆகியாரின் சகோதரரும் அன்னலெட்சுமி (கனடா), கமலாதேவி (கனடா), றஜனா (கனடா), கிறேஸ் மல்லிகா (கொழும்பு), மாலினி (கனடா), சண்முகேஸ்வரன் (பொறியியலாளர் -கனடா) கௌரி (கனடா), காலஞ்சென்ற யோகசுந்தரம் (எழுதுவினைஞர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16-01-2004) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை வடக்கு,
ஏழாலை.
T.P:-0776125140 (27188) (34-14)

தகவல்:
குமாரகுலசிங்கம்
(சகோதரர்).


# மிக விரைவில்

கிராமிய மக்களையும் நவீன கணனி உலகுடன் இணைக்கும் நோக்கில் புதிதாக உதயமாகிறது

"தகவல் தொழில்நுட்பக் கல்லூரி (CIT)
College of Information Technology
சிவன் வீதி, ஆவரங்கால், புத்தூர்.

T.P -0777-589703 (27180)(36-34-14) E-Mail: avarangalcit @ Yahoo.com.



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY 16-01-2004



யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த
திரு. திருமதி
ஜெனட்ஸ் - றெஜினீற்றா
தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி

## ஜெனோஷா

(ஜெனு குட்டி)

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (16.01.2004) வெள்ளிக் கிழமை பிரான்ஸிலுள்ள தனது இல்லத்தில் அக்கா ஜெனுஷாவுடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா ஜெனட்ஸ், அம்மா றெஜினீற்றா, அக்கா ஜெனுஷா, தொட்டப்பா, தொட்டம்மா, அம்மப்பா தேவதாஸ், அம்மம்மா பிறிச்சட், அப்பம்மா தங்கமணி, பூட்டி, இத்தாலியிலுள்ள பெரியமாமா றாயு குடும்பம், யாழ்ப்பாணத்திலுள்ள சின்னமாமா ஜான்சன் குடும்பம், நீர்கொழும்பிலுள்ள ஆசைமாமா செபஸ்ரியன் குடும்பம், பிரான்ஸிலுள்ள சின்னசித்தப்பா கனிலதா குடும்பம், அரியாலையிலுள்ள ஆசை சித்தப்பா பவளராசா குடும்பம் யாழ்ப்பாணத்திலுள்ள ஆசைமாமா சுரேஸ், குட்டிமாமா செலன்ரன், குட்டி சித்தி டிலோ மற்றும் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் குழந்தை யேசுவின் அருள்பெற்று பல்கலையும் கற்று சீரும் சிறப்புடன் பல்லாண்டு காலம் வாழ்கவாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

16/6, மத்தியூஸ் றோட்,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம். (27087)(34-36-14)

வாழ்த்துவோர்:
யோசப் தேவதாஸ்
(கட்டட ஒப்பந்தகாரர்)

உதயன்

## அமைதி முயற்சிகளுக்கு வேட்டு வைக்கும் கூட்டு!

இலங்கையின் தேசியப் பிரச்சினையான இனப்பூசலுக்கு அமைதித்தீர்வு காணும் விவகாரத்தில் மற்றொரு கறுப்பு அத்தியாயத்துக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அத்திபாரம் இடப்படவிருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் பேரினவாதப் போக்கில் மிளிரும் ஜே.வி.பிக்கும் இடையிலான அரசியல் கூட்டமைப்புத் தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதையே கறுப்பு அத்தியாயம் என்று குறிப்பிட விரும்புகிறோம்.

எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் சுபமுகூர்த்தத்தில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பெருங்கோலாகலமாகவும் விமரிசையாகவும் இந்த நிகழ்வு நடந்தேறும் என அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிறிசேனவும், ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவும் தத்தமது கட்சிகளின் சார்பில் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவிருக்கின்றனர்.

பாதுகாப்பு, உள்துறை உட்பட மூன்று முக்கிய அமைச்சுக்களைப் பறிகொடுத்து - அதிகாரங்களை இழந்த நிலையில் - சமாதான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு - அந்தப் பொறுப்பை ஜனாதிபதியே ஏற்கட்டும் என்று ஒதுங்கிக்கொள்ள முற்பட்டிருக்கின்றார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

இந்தச் சந்தர்ப்பத்தில் அப்பணியை முன்னெடுக்கும் பொறுப்பை ஏற்கவேண்டிய ஜனாதிபதியோ, அதைக் கவனிப்பதைவிட்டு, முழுச் சமாதான முயற்சிகளையுமே கடுமையாக விமர்சித்து, அவற்றை எதிர்க்கும் ஜே.வி.பி. போன்ற பேரினவாதகளோடு கைகோர்த்துக் கூட்டு வைக்கின்றார். இந்நிலையில், இந்தக் கூட்டமைப்பு முயற்சியை சமாதான முயற்சிகளுக்கு நிரந்தரமாகப் புதைகுழி தோண்டும் கறுப்பு அத்தியாயமாக விமர்சிப்பதில் என்ன தவறு இருக்கமுடியும்?

'இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை. இருப்பது ஆகப் பயங்கரவாதப் பிரச்சினை மட்டுமே. அதற்கு அரசியல் தீர்வு என்று ஏதும் அவசியமில்லை. இராணுவத் தீர்வே தேவைப்படுகின்றது. அதிகாரப் பகிர்வு என்பது நாட்டைத் துண்டு போடுவதற்கான தந்திரோபாயமாகும். பிரிவினை கோரும் விடுதலைப் புலிகளை ஆயுத வழி மூலம் - இராணுவப் பாணியில் - அடக்கி, ஒடுக்குவதே ஒரே வழி' - இப்படி முழங்கி வருகின்றது ஜே.வி.பி.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அரசினால் இதுவரை காலமும் முன்னெடுக்கப்பட்டுவந்த சமாதான முயற்சிகளைக் கடுமையாக விமர்சித்து வந்த அந்தக் கட்சி, சமாதான முயற்சிகளில் அனுசரணைப் பணியாற்றிவரும் நோர்வேத் தரப்பை நாட்டைவிட்டே துரத்த வேண்டும் என்றும் கூறிவருகின்றது.

அத்தகைய கட்சியோடுதான் கூட்டுச்சேரத் தீர்மானித்திருக்கின்றது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி.

கடந்த பொதுத் தேர்தலில் தென்னிலங்கையில் ஸ்ரீ.ல.சு.கட்சியின் தலைமையிலான பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பியும் தனித்தனியாகப் பெற்ற வாக்குகளை ஒன்றாகக் கூட்டினால் அது மொத்தம் ஒன்பது மாவட்டங்களில் ஆளும் ஐ.தே.முன்னணி பெற்ற வாக்குகளை விட அதிகமாக உள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. இந்த மாவட்டங்களில், ஒன்றாகத் தேர்தலில் நின்றிருந்தால் குறைந்த பட்சம் 'போனஸ்' இடங்களாக மட்டும் ஒன்பது எம்.பிக்கள் மேலதிகமாகக் கிடைத்திருப்பார்கள். இதுதவிர, மொத்த வாக்குகளின் அடிப்படையிலும், தேசியப் பட்டியல் ரீதியிலும் கூட மேலும் பல எம்.பி. ஆசனங்கள் மேலதிகமாகக் கிட்டியிருக்கும் - என்று கணக்குப் போடுகின்றன ஸ்ரீ.ல.சு.க. - ஜே.வி.பி. தலைமைகள்.

ஆளும் ஐ.தே.க. முன்னணியை எப்படியும் ஆட்சியிலிருந்து வீழ்த்தி, ஆட்சி அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றிவிடவேண்டும் என்று துடியாய்த் துடிக்கும் ஸ்ரீ.ல.சு.க., தேர்தல் வெற்றிக்காக யாருடனும் கூட்டுச் சேரத் தயார் என்று அந்தரப்படுகின்றது. அதன் காரணமாகத்தான் தேசிய இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் நடவடிக்கைகளை முழுமூச்சாக எதிர்க்கும் பேரினவாதக் கட்சியுடனும் கூட- தனது தனித்தன்மையைத் தொலைத்து விட்டு - அது கூட்டுச்சேர முன்வந்திருக்கின்றது.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காண்பதற்குக் கிடைத்த இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்துக்கும் வேட்டு வைப்பதில் குறியாக நிற்கும் தென்னிலங்கைப் பேரினவாதிகளுக்கு ஊக்கமளிக்கும் கூட்டாகவே இது உருவெடுக்கின்றது என்பது தான் வேதனையான அம்சம்.

# போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து பிரதமர் விலகி நிற்க முடியாது

## பிரதமருடனான பேச்சு ஆரம்பமாகும் என்கிறார் ஜனாதிபதி

நாட்டின் பிரதமர் என்ற முறையிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளார். அதனால் பதவிக்கு வரும் எந்த ஒரு அரசாங்கமும் போர்நிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்து கடைப்பிடிக்க கட்டுப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்திலிருந்து விலக அரசுக்கு வழியில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்.

அதனால், இந்த அரசாங்கமோ அல்லது புதிதாக தெரிவாகும் அரசோ சமாதான முயற்சியையும் போர்நிறுத்த ஒப்பந்தத்தையும் தொடர்ந்து கடைப்பிடித்து வரவேண்டும் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கிறார்.

சுயாதீன தொலைக்காட்சியில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தோன்றி வழங்கிய செவ்வியில் இவற்றைத் தெரிவித்திருக்கும் ஜனாதிபதி மேலும் கூறியிருப்பதாவது:-

நாடாளுமன்றததைக் கலைப்பதா, இல்லையா? என்பது குறித்து இன்னமும் தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. பொதுத் தேர்தல் நடத்தும் அவசியம் ஏற்பட்டால் தேர்தல் நடத்தப்படும். மாகாண சபைத் தேர்தலுக்கு தற்பொழுது தயாராகிறோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என்னிடம் கேட்காமலேயே அரசின் பிரதிநிதியாக போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இதனை நான் கடிதங்களிலும் சுட்டிக்காட்டினேன். அரசமைப்புச் சட்டத்துக்கு முரணாகவே போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடப்பட்டது.

எனது சமாதானத்திட்டத்தை ஐ.தே.க. 2000ஆம் ஆண்டில் எதிர்த்த போதிலும் ரணிலின் சமாதான நடவடிக்கை வெற்றி பெற நான் ஆதரவளித்தேன். அவரது சமாதான முயற்சிக்கு நான் இடையூறு விளைவிக்கவில்லை. சமாதான முயற்சியைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு கூறினேன்.

ஆயினும், சமாதான முயற்சியிலுள்ள மூன்று முக்கிய பலவீனங்களைச் சுட்டிக்காட்டினேன். அவை இலங்கை அரசு, நாட்டு மக்கள், முஸ்லிம் மக்கள் சம்பந்தமான பிரச்சினைகளாகும். அவ்வாறே போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி நாட்டின் கடற்பிரதேசத்தைப் பயன்படுத்துவது போன்ற விடயங்கள் குறித்து சிக்கல்கள் ஏற்பட்டிருந்தன. அவை குறித்து என்னுடன் பேசுமாறு பிரதமருக்கு கூறியிருந்தேன்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறுபவற்றைக் கவனத்தில் கொள்ள முடியாது. என்னை மூடை கட்டி பிரபாகரனிடம் ஒப்படைப்பேன் எனவும் அவர் கூறியிருந்தார். ஆனால், செய்யவில்லை.

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதாக பிரதமர் ரணில் உத்தியோகபூர்வமாக அறிவித்தால் அப்பொழுது எனது நிலைப்பாட்டை அறிவிப்பேன். அவர் ஒப்பந்தத்திலிருந்து விலகினாலும் போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடிக்க அரசு கட்டுப்பட்டுள்ளது. சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அதிகாரபூர்வ அறிவிப்பில் கையெழுத்திட்டுத் தருகிறேன் எனவும் நான் கூறினேன். அவ்வாறே, சமாதான நடவடிக்கைகளுக்குப் பாதுகாப்பு அமைச்சின் சார்பில் வழங்கப்படவேண்டிய ஒத்துழைப்பை மாற்றமின்றி எதிர்காலத்திலும் நான் வழங்குவேன்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எனக்குமிடையிலான பேச்சுக்கள் முறிவடையவில்லை. பேச்சுக்களுக்குத் தற்காலிக ஓய்வு வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாரத்தில் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

- இவ்வாறு ஜனாதிபதி செவ்வியில் கூறினார். (ஐ)

# கசிப்பு உற்பத்தி செய்த பெண்ணுக்கு நீதிமன்றம் 3 வருட கடூழியச் சிறை

## தண்டம் கட்டத்தவறினால் மேலும் 3 ஆண்டுகள் சிறை

யாழ்ப்பாணம்,ஜன.16

கசிப்பு உற்பத்தி செய்தமை, அதனை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்கள் வைத்திருந்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட பெண்ணொருவருக்கு யாழ். நீதிமன்றம் மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கொக்குவில், பூநாறி மரத்தடி வீதியைச் சேர்ந்த போல்ராஜ் நாகேஸ்வரி என்பவருக்கே இத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நபரை 15 லீற்றர் கசிப்புடன் கைது செய்த பொலீஸார் அதனை உற்பத்தி செய்வதற்கான உபகரணங்களையும் கைப்பற்றி இருந்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

குறிப்பிட்ட சந்தேக நபர் குற்றங்களை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு மூன்று வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்த நீதிவான் மேற்குறிப்பிட்ட மூன்று குற்றச்சாட்டுக்களிற்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவை அபராதமாக செலுத்துமாறும் உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட தண்டப்பணத்தை மூன்று வருடங்களுக்குள் கட்டத்தவறின் மேலும் மூன்றாண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

இதேவேளை கசிப்பு உற்பத்தி செய்தமை மற்றும் விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் கைது செய்யப்பட்ட ஐவருக்கு யாழ். நீதிமன்றம் 67 ஆயிரம் ரூபாவை அபராதம் விதித்துள்ளது.

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்தவர்களான தேவராசா ஜெயந்தி, கந்தசாமி கோபால சிங்கம் மற்றும் தெய்வேந்திரம் அரியரத்தினம், கோப்பாயைச் சேர்ந்த சின்னவன் ரூபசிங்கம் ஆகிய நால்வரையும் தலா 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தலா 3 ஆயிரம் ரூபா தர்மப்பணமும் செலுத்துமாறும் -

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த பரணிதரன் காஞ்சனா என்பவரை 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும், 5ஆயிரம் ரூபா தர்மப் பணமும் செலுத்துமாறும். யாழ். நீதிமன்ற நீதிவான் இ.த. விக்னராஜா உத்தரவிட்டார். (ம-5)

# சுதந்திரமாகத் தொழில் செய்யும் வரை நிவாரண விநியோகத்தை நிறுத்தாதீர்

## வடமராட்சி மீனவர் சங்க பிரதிநிதிகள் கோரிக்கை

வடமராட்சி,ஜன.16

கடலில் சுதந்திரமாக தொழில்செய்ய அனுமதிக்கப்படும் வரை மீனவர்களுக்கான உலர் உணவு நிவரணத்தை குறைக்கவோ நிறுத்தவோ கூடாது என வடமராட்சிப் பகுதியிலுள்ள மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகள் வடமராட்சி வடக்கு (பருத்திததுறை) பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்குடாநாட்டில் வறுமைக்கோட்டுக்குக்கீழும், இடம்பெயர்ந்த நிலையிலும் கடற்றொழிலற்ற நிலையிலும் வாழும் குடும்பங்களுக்கு இடம்பெயர்ந்தோர் நிவாரணம், மீனவர் நிவாரணம், மாதாந்த சமுர்த்தி நிவாரணம் என உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிவாரணங்களை வெகுவாகக் குறைக்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதன் அடிப்படையில், பிரதேச செயலக ரீதியாக இது குறித்த நிலைப்பாடுகள் தொடாபாக ஆய்வுகள், கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்பிரகாரம், வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி, வடமராட்சி வடக்குப் பகுதியில் உள்ள தொண்டைமனாறு, ஆதிகோவிலடி, இன்பருட்டி, முனை, கற்கோவளம் ஆகிய இடங்களில் உள்ள மீனவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்துக் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின்போது மீனவர் சங்கப் பிரதிநிதிகள் விடுத்த வேண்டுகோளில், கடற்றொழிலை சுதந்திரமாகச் செய்யக் கூடிய இயல்பு நிலை இன்னமும் ஏற்படவில்லை. இப்போதும் பாஸ் போன்ற கெடுபிடிகள் மற்றும் ஏனைய கெடுபிடிகளினால் சுதந்திரமாகத் தொழில்செய்ய முடியாத நிலை இருந்து வருகின்றது. தற்போதைய நிலையில் ஒரு மீனவன் ஒரு நாளைக்கு 100 ரூபாவைக்கூட வருமானமாகப் பெறமுடியாத நிலைமை இருக்கிறது.

இப்படியான நேரத்தில் நிவாரணத்தை வெட்டுவதோ, குறைப்பதோ நல்லதல்ல. இதனால் மீனவக் குடும்பங்கள் பட்டினி நிலையைத்தான் எதிர்நோக்க வேண்டிவரும்.

எமது நிவாரணத்தை வெட்டுவதாகவோ, குறைப்பதாகவோ இருந்தால் எமது படகுகளை பிரதேச செயலகம் முன்பாகக் கொண்டுவந்து வைத்துவிடுவோம்.

எனவே, எக்காரணம் கொண்டும் எமது நிவாரணத்தை வெட்டவோ குறைக்கவோ வேண்டாம். அதேநேரத்தில், நிவாரணம் வழங்கத் தொடங்கிய காலத்திலிருந்து இன்றுவரை பல வருடங்களாகியும் நிவாரணத்தின் தொகை அதிகரிக்கப்படவில்லை. அத்தொகையையும் காலத்துக்கு ஏற்றவாறு மதிப்பீடு செய்து வழங்கவேண்டும் எனத் தெரிவித்துள்ளனர். (ம-173-15)

# கடந்த கால எண்ணிக்கையிலாவது வணிகபீட மாணவரை அனுமதியுங்கள்

## யாழ். பல்கலை துணைவேந்தர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.16

கடந்த காலங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையளவு மாணவர்களை இம்முறையும் யாழ். பல்கலைக்கழக வணிக பீடத்துக்கு அனுமதிக்குமாறு துணைவேந்தர் சு.மோகனதாஸ், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் கேட்டுள்ளார்.

"யாழ். பல்கலைக்கழக வணிக பீடத்தில் 150 மாணவர்கள் கற்பதற்கு வசதி உள்ளது. எனினும் இந்த ஆண்டுக்கென 10 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளனர். பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட மாணவர் அனுமதிக்கான முதற்படிவத்திலும் 150 மாணவர்கள் என்ற இயலளவு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, கடந்த காலங்களில் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையான மாணவர்களையாவது இம்முறையும் உள்வாங்க ஆவன செய்யவேண்டும்" - என்று துணைவேந்தர் சு.மோகனதாஸ் கேட்டுள்ளார்.

**நாளை**

தை 03
சனிக்கிழமை
(17.01.2004)
திதி : தசமி
பிற்பகல் 2.10 வரை
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 3.27 வரை
சுபநேரம்: 3.35-5.05
ராகுகாலம்: 9.35-11.05
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

உயர்ந்த கோபுரத்தின் நிழலில் தாழ்ந்த சிந்தனைகள் உருவாகக் கூடாது.

# அறிவித்தல்

## யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கம்

தென்மராட்சிக் கிளை-6 புதுச்சந்தை, மீசாலை.

Regd.No./ பதிவு இல.: 6658

10.01.2004 தொடக்கம்

கீழ்க்காணும் கட்டண வீதம் அறவிடப்படுகின்றது

| | |
|---|---|
| முடியுடன் சேவ் / Hair Dressing & Shave | 60.00 |
| முடி மட்டும் / Hair Dressing only | 50.00 |
| சேவ் மட்டும் / Shaving only | 25.00 |
| தாடி ஒதுக்க / Shaping Beard | 30.00 |
| மெஷின் கட் / Machine Cut | 50.00 |
| பெண்களுக்கு / Ladies Grown Up | 60.00 |
| பெண் பிள்ளைகளுக்கு / Girls Grown Up | 40.00 |
| மசாஜ் / Macharge | 30.00 |
| டை அடிக்கக் கூலி / Hair Dying | 50.00 |
| குழந்தைகளுக்கு (10வயதிற்கு உட்பட்டவர்) / Children | 30.00 |
| கீற்றர் பிடிக்க / Hair Drier | 30.00 |
| முடி எடுப்பதற்கு / Shaveing off the hair | 100.00 |

***விடுமுறை தினங்கள்:***

தைப்பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, சித்திரைப் பௌர்ணமி, ஆடி அமாவாசை, தீபாவளி, நத்தார் மேற்குறிப்பிட்ட தினங்களுக்குள் வரும் 6 நாள்களுக்குள் வரும் ஞாயிறு கடை திறக்கலாம்.

***விசேட விடுமுறை தினங்கள்:***

பொதுக்கூட்டம், விசேட பொதுச்சபைக் கூட்டம், தொழிலாளர் தினம் (மேதினம்)

மேற்குறித்த கட்டணத்திற்குக் குறைவாகத் தொழில் செய்தாலும், வீடுமுறை தினங் களில் தொழில் செய்தாலும், நிலையம் திறக்கும் நேரம் பழைய நேரம் காலை 7.00 மணி முதல் இரவு 8.30மணி வரையுமாகும். மீறும் சந்தர்ப்பத்திலும் 2000/= (இரண்டாயிரம் ரூபா) குற்றப்பணமாக அறவிடப்படும்.

*ஞாயிற்றுக்கிழமைகளில் நிலையம் பூட்டப்படும்.*

- நிர்வாகம்.

(C/32792) (26-13-14)

## பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளை படைத் தளபதி சந்திப்பார்

யாழ்ப்பாணம்,ஜன.16

வடபகுதியில் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்களின் பாதுகாவலர் சங்கப் பிரதிநிதிகளையும், அன்னையர் முன்னணியின் பிரதிநிதிகளையும் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். இக்கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரி வீதியில் உள்ள பொதுசனத் தொடர்பு அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

அன்னையர் முன்னணியின் உறுப்பினர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு அன்னையர் முன்னணி அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு கேட்கப்பட்டுள்ளது. (எ-ரி)

## நெடுங்கேணியில் 3,705 குடும்பங்கள் மீளக்குடியமர்வு

வவுனியா, ஜன.16

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் வவுனியா வடக்கு நெடுங்கேணியில் இதுவரை 3 ஆயிரத்து 705 குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன.

இவர்கள் தங்களது சொந்த இடங்களில் தற்காலிக வீடுகளை அமைத்து தங்கியிருக்கின்றனர். அரசின் மீளக்குடியமர்வுக் கொடுப்பனவுகள் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. சில அரசசார்பற்ற நிறுவனங்களும் இம்மக்களுக்கு உதவியிருக்கின்றன.

நெடுங்கேணி பிரதேச செயலர் எஸ். ஐயம்பிள்ளை இந்தத் தகவல்களைத் தெரிவித்தார்.

இதேவேளை -

முன்னர் நெடுங்கேணியில் 45 பாடசாலைகள் இயங்கி வந்தன. ஆனால், இப்பொழுது 20 பாடசாலைகளே இயங்கி வருகின்றன. விரைவில் ஏனைய பாடசாலைகளையும் இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவா மேலும் தெரிவித்தார். (ம-4)

## தொழிற்பயிற்சி பெறுவதற்கான விண்ணப்பம்

# சிற்றி ரெயிலறிங் சென்ரர்

## (City Tailoring Centre)

### பயிற்சி நெறி 6 மாதங்கள்

- ★ உடை தயாரித்தல் (Dress Making) ஆண், பெண் இருபாலாரும்.
- ★ தையல் இயந்திரம் திருத்துதல் (Sewing Machine Repairing) ஆண், பெண் இருபாலாரும்.
- ★ கேக் ஐஸிங் (Cake Icing)
- ★ கைவேலை ( Handycraft)
- ★ உணவு தயாரித்தல் (Food Making)
- ★ பூவேலை (Flower Making)

### பயிற்சிநெறி 3 மாதங்கள்

- ★ கூந்தல் அலங்காரமும் மணப்பெண் அலங்காரமும் (Hair Styling & Bridal Make up)
- ★ கோலம் போடுதல் (Kolam)
- ★ புத்தகம் கட்டுதல் (Book Binding)

### தொழில் பயிற்சிக்கான மாதிரி விண்ணப்பம்

CITY TAILORING CENTRE

01 (அ) முதலெழுத்துடன் பெயர்:.................
(ஆ) முதலெழுத்து குறிக்கும் பெயர்:.............
02 முகவரி:......................
03 கிராம அலுவலர் பிரிவும், இலக்கமும்:..........
04 (அ) பிறந்த திகதி:..................
(ஆ) விண்ணப்ப முடிவு திகதியில் வயது:............
ஆண்டுகள்:.......... மாதங்கள்:.................
நாள்கள்:.........
05) பால்:...............
06) விவாகமானவரா?.......... தனிநபரா?............
07) கல்வித் தகைமைகள்:...............

இவ்விண்ணப்பத்தில் தரப்பட்ட விவரங்கள் யாவும் உண்மையானதும் சரியானதும் என நான் உறுதிப்படுத்துகிறேன்.

திகதி : விண்ணப்பதாரியின் ஒப்பம்:

*குறிப்பு:-* மேற்குறிப்பிடப்பட்ட தொழில் பயிற்சியில் தாங்கள் விரும்பும் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே விண்ணப்பங்கள் பூர்த்திசெய்து அனுப்புதல்வேண்டும். விண்ணப்பங்கள் யாவும் 27-01-2004 இற்கு முன்னதாக தபால் மூலம் அனுப்பிவைக்கவும். மேலதிக தகவலுக்கு நேரில் தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்,
சிற்றி ரெயிலறிங் சென்ரர்,
பிரதான வீதி,
ஆலடி, காரைநகர்.

(C/32794) (36-14-26-19)


BROWNS GROUP BG ESTD 1875

# பிறவுண்ஸ் தரும்

# பொங்கல் வெகுமதிகள்!

பொங்கல் காலத்தையொட்டி இரட்டிப்பு மகிழ்ச்சி!

29" தொலைக்காட்சிக்கு
ரூ.10,000/-வரை விலைக்கழிவு!

குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் ஆகியவற்றையும்
நம்பமுடியாத விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்!!



*ஏனைய மின் உபகரணங்களுக்கு 10% வரையிலான விலைக்கழிவு*

| பொருள் | கழிவு |
|---|---|
| 14" தொலைக்காட்சி | ரூ. 3,000/- |
| 20" தொலைக்காட்சி | ரூ. 5,000/- |
| 21" தொலைக்காட்சி | ரூ. 6,000/- |
| 29" தொலைக்காட்சி | ரூ.10,000/- |
| SJ19 குளிர்சாதனப்பெட்டி | ரூ.2,000/- |
| BJ22 குளிர்சாதனப்பெட்டி | ரூ.4,200/- |
| SJK20U குளிர்சாதனப்பெட்டி | ரூ.3,000/- |
| SJK21 குளிர்சாதனப்பெட்டி | ரூ.4,000/- |
| SJK25 குளிர்சாதனப்பெட்டி | ரூ.4,000/- |
| ES429 சலவை இயந்திரம் | ரூ.3,000/- |
| ES60W சலவை இயந்திரம் | ரூ.3,000/- |
| ES550 சலவை இயந்திரம் | ரூ.4,000/- |
| ES3300 சலவை இயந்திரம் | ரூ.2,500/- |

இச்சலுகை பின்வரும் பிறவுண்ஸ் காட்சியறைகளில் மட்டுமே வழங்கப்படும்

42/1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே: 065-222 6385
89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021-222 5150
99, வடக்கு கடற்கரை வீதி (NC Road), திருகோணமலை. தொ.பே: 026-222 0005
08, முதலாம் குறுக்குத் தெரு, வவுனியா. தொ.பே: 024-222 0081
20, கண்டி வீதி, நுவரெலியா. தொ.பே: 052-223 5590

SHARP be sharp ELBA Moulinex OLYMPUS Sunset Cornell

TNT Grafix

# ஆநிரைகளைப் போற்றிடும் பட்டிப் பொங்கல் நன்னாள்

இன்று பட்டிப்பொங்கல் நன்னாள். இது பசுக்களைப் போற்றும் நாள். பசு ஒரு தெய்வீகப் பிராணி. அது பண்டைக்காலந்தொட்டு வணக்கத்துக்குரியதாகவே இருந்து வருவதனைப் புராணங்கள், இதிகாசங்கள் கூறுகின்றன. சிவபெருமானுக்குரிய அபிஷேகத் திரவியங்கள் பசுவிலிருந்துதான் பெறப்படுகின்றன.

### தெய்வாம்சம்

ஆதிபராசக்தியாக விளங்குகின்ற அன்னை ஸ்ரீ பார்வதி தேவியானவள் பசுவைத் தெய்வமாகப் போற்றி கோமாதா பூஜை செய்ததாகப் புராணங்கள் வாயிலாக அறியக் கிடக்கின்றது. தெய்வாம்சம் பொருந்திய பசுவில் தேவர்கள் உறைவதாகவும் கூறப்படுகின்றது.

நெல்மணிகள் உற்பத்தியாக்குவதற்கு உழவன் எவ்வளவு தூரம் உழைத்துப் பாடுபட்டானோ அவனுக்கு உற்றதோர் உறுதுணையாக இருந்து உன்னத சேவை செய்ததில் பசுவுக்கும் பெரும்பங்குண்டு. நெற்றி வியர்வை நிலத்திலே சிந்தக் கஷ்டப்பட்ட கமக்காரனுக்கு வலது கைபோல விளங்கிய பசுவுக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவோம.

### உழவனின் தோழன்

பசுவைப் போலவே காளைமாடும போற்றுதலுக்குரியது. நெல்வயலை விளையச் செய்த சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே தைப்பொங்கல் வழிபாடு இடம்பெறுகிறது. அதேபோலவே உழவனுக்கு உற்ற தோழனாக விளங்கி அமோக விளைசலுக்கு அரிய சேவையாற்றிய காளை மாட்டுக்கும் தேவைக்கேற்ப பால் முதலியனவற்றைத் தந்துதவிய பசுமாட்டுக்கும் பூஜை வழிபாடுகள் நடத்தி பொங்கிப் படைத்து மகிழ்வதே பட்டிப்பொங்கலாகும்.

ஒரு நாட்டின் செல்வம் பசுக் கூட்டத்திலேயே தங்கியிருந்தது. அதனாலேயே யுத்தத்திற்கு அறைகூவல் விடும் மன்னர்கள் அந்த நாட்டின் ஆநிரைகளை முதலில் கவர்ந்து விடுவது போர்மரபாக இருந்தது.

இத்தகைய பெருமையும் தெய்வீகமும் அருமையும் நிறைந்த பசுவையும, காளைமாட்டையும் நாம் கொல்லுதலாகாது. பசுவதை கொடிய பாவம். அதன



இறைச்சியை உண்ணுவதும் பெரும் பாவமான செயல்.

சைவப் பாரம்பரியத்தைக் கடைப்பிடித்து சைவமரபுகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய நாமே தவறிழைக்கலாமா? கூடவே கூடாது. சைவ சமயத்தை அனுட்டிக்கும் நாம் பசுவை போற்றி வழிபட்டு நமது முன்னோரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் சுவாமி ஞானப்பிரகாசரும் கட்டிக்காத்த சைவக் கோட்பாடுகளை அனுசரித்து உயிர்களை ஆதரித்து வாழ்தல் வேணடும். ஆகவே, இனிமேல்வரும் காலத்தில் உண்மையான சைவர்களாக வாழ்ந்து இம்மைக்கும் மறுமைக்கும் உய்வைத் தேடி மனிதப்பிறவி எடுத்ததன் பய

**சிவநெறிக் கலாநிதி**
**இராசையா ஸ்ரீதரன்**

னைப் பெற்று புனிதம் பேணும் மனிதராக வாழ்ந்து நற்கதி அடைய முயற்சிப்போமாக.

# எங்கே அமைதி?

குருகுலம் முடிந்து, இரு மாணவாகள் குருவின் ஆசிக்காகக் காத்திருந்தார்கள். "நீங்கள் இருவருமே எல்லாத்துறைகளிலும் 'தலைசிறந்தும் விளங்குகிறீர்கள். உங்களுக்கு ஒரு கடைசிப் பரீட்சை 'அமைதி' என்ற தலைப்பில் ஓவியம் வரைந்து என்னிடம் கொண்டு வாருங்கள். அதிலிருந்து நான் உங்களில் சிறந்தவனைத் தெரிவுசெய்கிறேன்" - என்றார்.

முதல் மாணவன் வரைந்த ஓவியத்தில், மலைகளின் பின்னணியில், நிர்மலமான நீர்த்தேக்கம். மேலே பஞ்சுப் பொதியென வெள்ளை மேகங்களுடன் கூடிய நீலவானம். பார்த்த உடனே நீண்ட தியானத்திற்கு அமரத் தூண்டும் ஓர் அசாதாரண சூழ்நிலையின் பிரதிபலிப்பு.


இரண்டாவது மாணவனின் ஓவியத்திலும் மலைகள் இருந்தன. தொலைவில் கருமேகங்களிலிருந்து விழும் மழைச் சாரல்கள். இடையே மின்னலின் ஒளிக்கீற்று. நுரைக்கும் நீரருவி. எந்நேரமும் இடி முழங்கும் என்ற எதிர்பார்ப்புடன் கூடிய ஓவியம். 'அமைதி' என்ற தலைப்பிற்குப் புறம்பாக இருந்தது.

இரு ஓவியங்களையும் கண்ணுற்ற குருவின் முகத்தில் விடை கிடைத்த திருப்தி நிலவியது. கூர்ந்து நோக்கிய அவரது கண்களுக்கு, இரண்டாவது ஓவியத்தில், நீரருவியின் பின்னால், கரிய பாறைகளின் வெடிப்புக் கடையே, ஒரு சிறிய மரக்கிளை தென்பட்டது. அதில் கூடு கட்டியிருந்த தாய்க்குருவி, தான் சேர்த்து வைத்த தானியங்களை, பசியோடு ஓலமிடும் தன் குழந்தைகளுக்குப் பகிர்ந்து அளித்துக் கொண்டிருந்தது.

**ஞானக்கதிர்**

அந்த ஓவியத்தை வரைந்த மாணவனைப் பாராட்டிய குரு, "அமைதி என்பது நிசப்தத்தில் இல்லை என்பதை நீ உணர்த்திவிட்டாய். எந்த ஒரு சூழ்நிலையில், மனிதன் உள்பட, சகல ஜீவராசிகளும், தம் அன்றாட வேலைகளை மன அமைதியுடன் செயற்படுத்த முடிகிறதோ, அங்குதான், உண்மையான அமைதி நிலவுகிறது என்று அர்த்தம்" - என்றார்.

*நன்றி: பக்தி.*





இந்து கலாசார அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய அலுவலகம் ஏற்பாடுசெய்த ஆறுமுகநாவலர் குருபூசைத் தின விழா அண்மையில் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றது.

குருபூசைத் தினத்தை முன்னிட்டு நல்லூர் கந்தன் ஆலயத்தில் இருந்து ஆறுமுகநாவலரின் திருவுருவப் படம் தாங்கிய ஊர்தி புறப்படுவதை மேல் படத்திலும், இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்திய திருவாவடுதுறை ஆதீன குருமகா சந்நிதானம் சீர்வளர் சிவப்பிரகாச தேசிகருக்கு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் பொன்னாடை போர்த்துக் கௌரவப்பதை கீழே உள்ள படத்திலும் காணலாம். (எ-5)

# தலைமைத்துவப் பயிற்சி பெறுவதில் பெண்கள் அக்கறை காட்டவேண்டும்!

## வலி.மேற்குப் பிரதேச செயலர் அறிவுறுத்து

இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு தலைமைத்துவ வாய்ப்புகள் அதிகரித்துவருகின்றன. ஆகவே, தலைமைத்துவப் பயிற்சிகளைப் பெறுவதில் பெண்கள் அக்கறை காட்டவேணடும்.

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ் இவ்வாறு அறிவுறுத்தினார்.

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் சங்கானை பிரதேசசெயலர் பிரிவிலுள்ள பண்ணாகத்தில் தையல் மனையியல் பயிற்சி சுபீத்தில நடத்தப்பட்டது. இதன் ஆரம்ப நிகழ்வில் உரையாற்றும்போதே வலிகாமம் மேற்குப் பிரதேசசெயலர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பண்ணாகம் மாதர் கிராம முன்னேறச் சங்க மண்டபத்தில் இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப விழா மாதா சங்கத் தலைவி செல்வி அ.சரஸ்வதி தலைமையில் நடைபெற்றது. விழாவினை பிரதேச செயலர் சி.ஏ.மோகன்றாஸ், கணக்காளர் செல்வி இ.சுகந்தினி ஆகியோர் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இதில் பிரதேச செயலர் உரையாற்றியபோது மேலும் தெரிவித்ததாவது:-

இங்கு ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள பயிற்சிநெறி தொடர்ந்தும் ஓர் ஆண்டு முழுமையாக நடைபெறும். வெளிநாடுகளில் தையல் கலைக்கும் மனையியலுக்கும் பெரும் கிராக்கி உள்ளது. இங்கு பயிற்சிபெறும் யுவதிகளில் பலரும் வெளிநாடுகளுக்குச் செல்லவேண்டிய வாய்ப்புகள் வரலாம். அங்கு இத்தொழில்களின மூலம நல்ல வருமானத்தை ஈட்ட முடியும். இதன்மூலம், இந்தக் கிராமத்தின தும் வசதி குறைந்த மக்களினதும் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ்பளிக்கமுடியும்.

இந்தப் பயிற்சி நெறியில் தையல், மனையியல் பயிற்சிகளுடன் தலைமைத்துவப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இன்றைய காலகட்டத்தில் பெணகளின் தலைமைத்துவத்தை அதிகமான இடங்களில் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் தலைமைத்துவ பயிற்சியைப் பெண்கள் அவசியம் பெறவேண்டும். இந்த பயிற்சி நெறியை உற்சாகத்துடன் பயின்று முழுமையான திறமைசாலிகளாக அனைவரும் வெளியேறவேண்டும் என்றார் பிரதேச செயலர்.

இந்த நிகழ்வில் பிரதேச செயலகக் கணக்காளர் செல்வி இ.சுகந்தினி, நிர்வாக அலுவலர் மு.சிவராசா, கிராம அபிவிருத்தி அலுவலர் தா.தியாகமூர்த்தி, கிராம அலுவலர் திருமதி சி.திலகவதியார், வைத்திய கலாநிதி வை.செந்தில்நாதன் உட்படப் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். (ஒ-8-175)

# மீள்குடியமர்வு உதவித் திட்டங்கள் நீண்டகால நோக்கில் அமையவேண்டும்

தற்சமயம் மீளகுடியமர்வு தொடர்பாக அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் குடாநாட்டு மக்களுக்கு உதவித் திட்டங்களை திட்டமிட்டுச் செயற படுத்திவருகின்றன. பல கோடிக் கணக்கான ரூபா இந்தத் திட்டங்களுக்காகச் செலவு செய்யப்படுகின்றன. இந்நிறுவனங்கள் போட்டி போட்டுக்கொண்டு செயற்திட்டங்களை கிராமம் தோறும் செயற்படுத்துகின்றன. கொள்கை அளவில் இது வரவேற்கக கூடியதே. ஆனால், நடைமுறையில் இந்தத் திட்டங்களைச் செயற்படுத்துவது திருப்தி அளிப்பதாக இல்லை என்றே பொதுமக்கள் கருதுகின்றனர்.

அரசுசார்பற்ற நிறுவனம் ஒன்று தனது திட்டத்தை செயற்படுத்தும் கிராமத்தில் இன்னொரு நிறுவனம் தனது திட்டங்களை செயற்படுத்துவதில்லை. ஆனால், திட்டத்தைச் செயற்படுத்துவதில் அரசசார்பற்ற நிறுவனங்கள் பொது விதிகளைப் பின்பற்றுவதில்லை. இதனால் ஒரு கிராமத்தில் உதவிகளை வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட வாய்ப்புகள் ஏற்படுகின்றன. திட்டங்களைச் செயற்படுத்த உதவும் உள்ளூர் வாசிகள் தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் உதவிகள் கிடைக்கச் செய்வதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

### குடிதண்ணீர் பிரச்சினை

சில நிறுவனங்கள் கிராமரீதியில் உள்ளூர் அமைப்புக்களை அணுகி கிராம உத்தியோகஸ்தரின் ஆலோசனையுடன் திட்டங்களை அமுல் படுத்துகின்றன. இது வரவேற்கத்தக்க நடவடிக்கையாகும் சில நிறுவனங்கள் நன்னீர் கிணறுகளைப் புனரமைத்துக் கொடுக்கின்றன. அதேபோல அதிகரித்துவரும் சனத் தொகைக்கு ஏற்ப புதிய நன்னீர் கிணறுகளையும் கூடுதலாக அமைத்துக் கொடுக்க அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்வர வேண்டும். இது நீண்ட காலம் மக்களுக்கு நன்மை பயக்கும் திட்டமாகும். அதேபோல, கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் பல குடும்பங்கள் குடிதண்ணீர் வசதியின்றி வாடுகின்றன. இக் குடும்பங்களின் அன்றாடப்பயன்பாட்டுக்கு குளங்களையே பயன்படுத்தும் நிலையும் உள்ளது. இப்படியான குளங்களை இனங்கண்டு அவற்றைப் புனரமைக்க முன்வரவேண்டும். ஏனெனில், இந்தக் குளங்கள் பல ஆண்டுகாலம் புனரமைக்கப்படவில்லை எனவே, இப்படியான குளங்கள் கட்டாயம் புனரமைக்கப்படல் வேண்டும்.

### உதவிப் பொருள்கள்

சில நிறுவனங்கள் ஏனோதானோ எனத் தன்னிச்சையாகத் திட்டங்களை வகுத்து பாய், உடுபுடைவைகள், மணவெட்டி கோடரி, பாத்திரங்கள் என்பவற்றை வழங்கி வருகின்றன. இந்த உதவிகள் வீணானவை என்று கருத முடியாதவைதான் ஆனால் மீளக்குடியமர்ந்து இரண்டு வருடங்களுக்குப் பின் இவற்றை வழங்குவதில் அர்த்தம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. இப்படி வழங்கப்பட்ட பொருளகளில் பலவும் பயனாளிகளுக்குப் பயனபடுவதாகத் தெரியவில்லை. இவற்றில் பலவும் கைம்மாறுகின்றன. அல்லது விற்கப்படுகின்றன.

### குடியிருப்பு

மீளக்குடியமர்ந்த மக்களின் அடிப்படைத்தேவைகளில் அவசியமானது வீடு. இன்றும் பல குடும்பங்கள் ஓலைக் குடிசைகளில் அதிக குடும்ப உறுப்பினர்களுடன் அடிப்படை வசதிகள் ஏதுமில்லாத நிலையில் வாழ்கின்றன. மாரிகாலங்களில் இவர்கள் படும் கஷ்டம் சொல்லமுடியாது. எனவே, அரசசார்பற்ற நிறுவனங்கள் இத்தகைய குடும்பங்களுக்கு குடியிருப்புகளை அமைக்க உதவுவதில் அதிக அக்கறை செலுத்த வேண்டும்.

### கழிப்பறை வசதி

கிராமப்புறங்களில் இன்று பலருக்கும் கழிப்பறை வசதிகள் இல்லை மாரிகாலங்களில் தொற்றுநோய்கள் பரவும் அபாயம், சுகாதாரச் சீர்கேடு என்பன உண்டு. இவற்றைக் கவனத்திற்கொண்டு மலசலகூட வசதிகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும்.

மேலும் குடாநாட்டில் நெல்விவசாயம் சார்ந்த நீர்ப்பாசன வாய்க்கால்கள் பலவும் பல வருட காலங்களாகப் புனரமைக்கப்படவில்லை. ஒரு சில வாய்க்கால்களை உலக உணவு ஸ்தாபனம் கமத்தொழில் சேவை திணைக்களத்தின் ஊடாகப் புனரமைத்துவருகின்றது. ஆனாலும், குடாநாட்டில் உள்ள பல வாய்க்கால்கள் பல வருடங்களாகப் புனரமைக்கப்படாத நிலையிலேயே உள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு அரசசார்பற்ற நிறுவனங்கள இத்திட்டங்களை முன்னெடுக்க வேணடும்.

### கைத்தொழில்கள்

அரசசார்பற்ற நிறுவனங்கள் கிராமங்களில் உள்ள மூலப்பொருள்களைப பயன்படுத்தக்கூடிய குடிசைக் கைத்தொழில்களை இனங்கண்டு அவற்

**செய்திக் கட்டுரை**
**வரணிச் செய்தியாளர்**

றினை ஊக்குவிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இதனால், வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். அத்துடன், வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களின் பொருளாதார வளத்தை மேம்படுத்தலாம்.

இப்படியான திட்டங்களைச் செயற படுத்த கிராமப்புறத்து படித்த இளைஞர், யுவதிகளும் முன்வரவேண்டும். அப்போதுதான், அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்டங்களும் வெற்றிபெறும்.

### ஒன்றிணைந்த செயற்பாடு

அரசசார்பற்ற நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதன்மூலம் மக்களுக்கு அதிகம் சேவை செய்ய முடியும் இதன்மூலம், மக்களின் தேவைகள் பூர்த்திசெய்யப்பட இடமேற்படும். இந்த அரசசார்பற்ற நிறுவனங்களை அணுகுவோர் சிலர் தமக்கும் தாம் சார்ந்த குடும்பங்களுக்கும் உதவிகளைப் பெற்றுவருவதனைச் சில இடங்களில் காணக்கூடியதாகவுள்ளது. இந்தவிடயத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் அதிக விழிப்புடன் செயற்படவேண்டும்.

இப்படியாக அரசசார்பற்ற நிறுவனங்கள் செயற்பட்டால் மக்கள் மத்தியில் வரவேற்புக் கிடைக்கும் எனவே, அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது திட்டங்களை மக்களின் நீண்டகாலத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் முன்னெடுக்கவேண்டும்.

# முன்னர் மின் பெற்ற பகுதிகளுக்கு விரைவில் விநியோகம் விஸ்தரிப்பு

## தென்மராட்சிக் கூட்டத்தில் அதிகாரி தகவல்

சாவகச்சேரி,ஜன.16

தென்மராட்சிப் பகுதியில் 1990 ஆம் ஆண்டு மின்சாரம் பெற்ற பகுதிகளுக்கு இந்த ஆண்டு மின்சாரம் விநியோகம் விஸ்தரிக்கப்படும்.

இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர் எஸ்.வல்லிபுரம் இவ்வாறு தெரிவித்தார். தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி தொடர்பாக அண்மையில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடமபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தென்மராட்சியின் நகரப்பகுதிகளுக்கு மின்சாரம் விநியோகிப்பதில் அக்கறை காட்டப்படுகிறது என்றும் -

கிராமப் பகுதிகளை மின்சார சபை கவனத்தில்கொள்ளவில்லை என்றும் -

இந்தக்கலந்துரையாடலில் ஓய்வு பெற்ற அதிபர் த.அப்புத்துரை பொது அமைப்புகள் சார்பாகத் தெரிவித்தார்.

அத்துடன், மின்சார விநியோகம் தொடர்பான மகஜர் ஒன்றையும் அவர் மின்சாரசபை அதிகாரிகளிடம் கையளித்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய மின்சார சபைப் பொறியியலாளர் கூறியதாவது:-

1990ஆம் ஆண்டுக்காலப் பகுதியில் தென்மராட்சியில் எந்த இடங்களுக்கெல்லாம் மின்சாரம் வழங்கப்பட்டதோ, அந்த இடங்களுக்கு இந்த ஆண்டு மின்சாரம் வழங்கும் வகையில் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இதேவேளை, மின்கம்பங்கள் உரியநேரத்தில் கிடைப்பது சிரமமாக உள்ளது. இதனை நிவர்த்தி செய்து மின்சார விநியோகத்தை விஸ்தரிக்க முயற்சி மேற்கொள்ளப்படுகிறது - என்றார். (ஒ-31)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Toyota Corona (14ஸ்ரீ ) ரக கார் விற்பனைக குண்டு. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: சி.மகாலிங்கம், மலையந் தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட் டித்துறை. தொலைபேசி இலக்கம்: 021 - 226-3634. (27168)

## வாடகைக்கு

திருமண சேவைக்கு மட்டும் வாடகைக்கு விடுவதற்கான New Model (2000 Model) வெள்ளைக்கார். தொடர்புகளுக்கு: 0777-113880,021 222 7357. (27124)

## விற்பனைக்கு

கொழும்பிலிருந்து கொண்டுவரப்பட்ட பாவித்த ஜமகா நியூ ஸ்மேற் 50. கொண்டா MD 90 Topping Condition மோட்டா சைக்கிள்கள் குறைந்த விலையில் விற்பனைக குண்டு.

**சித்தி விநாயகர் யப்பான் பசார்,**
631A, K.K.S. றோட்,
யாழ்ப்பாணம்.
(பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் அருகில்)
(27187)(34)

## தபால்மூலம் சிங்களம்

இப்போது நீங்களும் வீட்டில் இருந்தபடியே சிங்கள மொழியைப் படித்து எழுத/வாசிக்க/பேச தேர்ச்சி பெறலாம். வழமையான நேரடி வகுப்பு களுமுண்டு. விவரங்களுக்கு: ஆசிரி யர் திரு.மல்வான, இலக்கம் 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப் பாணம். (27099)

## விற்பனைக்கு

**நல்ல நிலையிலுள்ள சைனிஸ் அச்சு இயந்திரம் Proof இயந்திரம் மற்றும் தளபாடங்கள், எழுத்துக்கள் என்பன விற்பனைக்குண்டு.**

தினமும் காலை 6.00 மணிமுதல் 8.00 மணிவரை.
பி.ப. 3.00 மணிமுதல் 6.00 மணி வரை

*தொடர்பு:-*

**N.குலநாயகம்,**
**சந்தை லேன், ஆவரங்கால்.**
(சி-32802)

# முகாமைத்துவ கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.16

இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தில் முகாமைத்துவக் கற்கை நெறியை மேற்கொள்ளவிரும்புபவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. இலங்கைத் திறந்த பல் கலைக்கழக யாழ்.அலுவலகம் இதனை தெரிவித்துள்ளது. ஆங்கில மொழி மூல தொலைக்கல்வி முறையில் இப் பட்டப்படிப்பை மேற்கொள்ள முடியு மென தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஒ-85)

## I.E.M.S. கல்வியங்காடு

**22/01/2004 முதல் ஆங்கில பாலர் பாடசாலை ஆரம்பம்.**

சகல தரப்பினர்களுக்குமான ஆங்கிலமும் Elocution வகுப்புக் களும் நடைபெறுகின்றன.

**I.E.M.S.I.**
G.P.S. Road, Kalviyan kadu,
Jaffna.
(26942)

# மரண அறிவித்தல்

## பொன்னையா பத்மநாதன்

(முன்னாள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளர்)

வண்ணார்பண்ணை, கலட்டியைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி கிழக்கு, இராச வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பத்ம நாதன் அவர்கள் 14.01.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சறோஜினிதேவியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான திரு.திருமதி பொன்னையா - இராசம்மா ஆகியோரின் புதல் வரும் தியாகராஜா, காலஞ்சென்றவர்களான ஜெயலட்சுமி, பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கதிரவேற்பிள்ளை மற்றும் இராசம்மா தம்பதிகளின் மருமகனும் மஞ்சுளா (ஜேர்மனி), கோமிலா (கனடா), சசிகலா (லண்டன்), கௌசலா (ஆசிரியை, யாழ்.கொக்கு வில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை), தயாபரன் (பொறியியலாளர், லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலசுப்பிரமணியம்(ஜேர்மனி), ஜெயக்குமார்(கனடா), தர்மபாலா (லண்டன்), குகதாசன்(அரச ஒப்பந்தகாரர்), ராதை(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் நேருகா, லக்ஷன், ஆரணி, அருண், ஆர்த்தி, நிரோஜன், மதுரன், ஆதவன், யோபிசுதன், அச்சுதன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (18.01.2004) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.*

தகவல்:
சி.குகதாசன்
(தாசன் - மருமகன்).
(27193)(34-14)

# மனமுவந்து பாராட்டி வாழ்த்துகிறோம்



எங்களது கிராம முன்னேற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் உதவுமுகமாக ஒருதொகுதி புடைவைகளையும், புதிய மலசலகூடம் அமைப்பதற்கான தேவைகளையும் கிணறு கள் புனரமைப்பதற்கும் மலசலகூட புனரமைப் புக்கும் தொழில் நலன்கருதி தொழில் ஊக்கு விப்புப் பொருள்களைக் கொள்வனவு செய் வதற்கும் எமது நிலையத்தின் வளர்ச்சிக் குமாக ரூபா 7,50,000 வழங்கியமைக்காக இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்

## திரு.தி.மகேஸ்வரன்

அவர்களை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம். அவர்தம் சேவைகள் மேன்மேலும் வளர எல்லாம்வல்ல இறைவனைப் பணிகின்றோம்.

- காந்திஜி சனசமூக நிலையத்தினர்,
கிராம மக்கள் கொக்குவில் மேற்கு.

(27181)(34-14)

# விசேட பொதுக்கூட்டம்

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை சிமெந்துப் பொதுத் தொழிலாளர் யூனியனின் விசேட பொதுக்கூட்டம் நாளைமறுதினம் (18-01-2004) ஞாயிறு காலை 9.30 (புதியநேரம்) மணிக்கு யாழ். பலநோக்குக்கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நடைபெறும். இக்கூட்டத்துக்கு தொழிற்சங்க அங்கத்தவர்கள அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

*காங்கேசன் சிமெந்துத்தொழிற்சாலை,*
*காங்கேசன்துறை.*
(27092)(35-34-14)
- செயலாளர்.

# 90 ஆம் நாள் நினைவு

மண்ணில் 09 - 01 - 1977



விண்ணில் 20 - 10 - 2003

## அமரர் சந்திரகுமார்

(ஊரெழு வடக்கு சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்டவர்)

*குடும்பம், சுற்றம், உறவு, ஊரென்று*
*நீண்ட வாழ்வின் தடம்பதித்து*
*வாழ்வில் நிறைவோடு வாழ்ந்தீர்!*
*வாழ்வின் சுமைகள் சுமைகனக்கச்*
*சுகமாகச் சுமந்தீர்!*
*கனவுகளும் காத்திருப்புகளும் உம்*
*நெஞ்சம் நிறைந்திருக்க காத்திருந்தர்*
*வாழ்வின் இடைவழியில்*
*நம்மைத் தவிக்கவிட்டு எங்ககன்றீர்.....?*
*ஈரவிழிகளுடன் எம் நெஞ்சிறுகிக் கனக்க*
*உம் ஆத்மசாந்திக்காய்ப் பிரார்த்திக்கிறோம்.*

*ஊரெழு வடக்கு,*
*சுன்னாகம்.*

- குடும்பத்தினர்.
(27192-34-14)


## தாய்வான் நாட்டின் அதி உன்னத தொழில் நுட்பத்தில் வடிவமைக்கப்பட்ட இயந்திரம் இப்போது இலங்கையில்....!




தரச்சிறப்பில்
முன்னணி வகிப்பவை
நம்பகத் தன்மைக்குப்
பெயர் பெற்றவை

2 Colour, 4 Colour, 6 Colour


* "பிளெக் ஸோகிரபிக்ஸ்" (Flexographic)

நேர்த்தியான ஆறு வர்ண நிறங்களில் அச்சிடும் தன்மை கொண்டவை

அச்சிடும் அகலம்: 600m.m / 800m.m./ 1000m.m/ 1200m.m.
அதிவேக அச்சிடப்படும் தன்மை கொண்டவை




* அதிவேக இரண்டு வர்ணங்களில் "HDPE", LDPE, PP தயாரிக்கப்படும் இயந்திரம் பிலிம் புளொயிங் "Film Blowing" இயந்திரம்
* நேர்த்தியாக வெட்டி வடிவமைக்கக் கூடிய அதிவேக பைகள் தயாரிக்கப்படும் இயந்திரம் (BAGS - MAKING MACHINE)



*இவ் இயந்திரத்தில் சொப்பிங் பாக்ஸ், குறோசறி பாக்ஸ், கையுறைகள், லொண்டறி பைகள், நெகடிவ் பிலிம் பைகள் மற்றும் பலவகையான பைகள் தயாரிக்கலாம்*

*இவற்றுள்* "Servo Drive System" *மற்றும்* "Cluth & Brake System" *உள்ளடக்கப்பட்டுள்ளது*

* கழிவு பிளாஸ்டிக் மீள் உற்பத்தி இயந்திரம் (Waste Plastic Recycling Plant)
* சுற்றாடல் மாசுபடுதலை குறைக்கும் தன்மை கொண்டவை
* இதன் மூலம் புதிய நிறுவனமொன்றை எவ்வித இடையூறுகளும் இன்றி ஆரம்பிக்கலாம்.
* உங்களுடைய இடங்களிலேயே இவற்றை மீள் உற்பத்தி செய்யலாம், இதன் மூலம் வீண் சிரமங்களையும், போக்குவரத்து செலவுகளையும் குறைக்கலாம்.



மேலதிக விபரங்களுக்கு:-
No: 79 New Moor Street, Colombo - 12
Tel :- 2470446, Fax:- 2326502, E.mail:- aktpack@eureka.lk

# பிரதேச செயலகம் ஊடாக 'பாஸ்போட்' பெற முடியாது!

கடவுச்சீட்டினை யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களூடாக வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச செயலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். மாவட்ட அரச அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக கடந்த இரண்டு மாதங்களாக இந்தப் பணிகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன என அந்த அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

"தற்போது ஏ-9 பாதை திறக்கப்பட்டுள்ளது. எனவே, யாரும் கொழும்புக்குச் சென்று வரமுடியும். ஆகவே, அந்தப் பணிகளை இங்கு மேற்கொள்வது தேவையற்றது" என்று அந்த அதிகாரிகள் கூறுகின்றனர்.

அதிகாரிகளின் இந்த நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் கடும் விசனம் வெளியிட்டுள்ளனர். கடவுச் சீட்டு பெறுவதற்கான விண்ணப்பத்தை விணணப்பதாரி நேரடியாக அதிகாரிகளிடம் கையளிக்க வேண்டும் என்பது முக்கிய நிபந்தனையாகும். இதன் காரணமாக கடவுச்சீட்டுப் பெறுவதற்காக விண்ணப்பிக்கும் வயோதிபர்கள், குழந்தைகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் கொழும்பு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் வீண் அசௌகரியங்களும் செலவினங்களும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு சென்று வர வேண்டி உள்ளதனால் 2 ஆயிரத்து 500 ரூபா செலுத்தி வழமையான சேவையைப் (Normal Service) பெறுவதற்குப் பதிலாக 5 ஆயிரம் ரூபாவை செலுத்தி ஒரே நாள் சேவையைப் (Same day Service) பெற வேண்டி உள்ளதாக மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது. (ம-9)

# சாவகச்சேரியில் கடந்த ஆண்டு கள் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி

தென்மராட்சி,ஜன.16

சாவகச்சேரியில் கடந்த வருடம் கள் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த கால யுத்தத்தினால் இப் பகுதியில் பெருமளவிலான பனை, தென்னை மரங்கள் அழிக்கப்பட்டதே இதற்குக் காரணம்.

மரங்கள் அழிக்கப்பட்டு விட்டதனால் சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க எலலைப் பரப்பில் கள் உற்பத்தியில ஈடுபடும் அங்கத்தவர்களின் எண்ணிக்கையிலும் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால் பல குடும்பங்கள் பாதிப்படைந்துள்ளன.

1999ஆம் ஆண்டில் ஆயிரத்து 847அங்கத்தவர்கள் இப் பிரிவில் கள உற்பத்தியில் ஈடுபட்டிருந்தனர். 2003 ஆம் ஆண்டில் 300இற்கும் குறைவான அங்கத்தவர்களே தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பிரதேசத்தில் கள் உற்பத்தி குறைந்துள்ளதுடன் சங்க வருமானத்திலும் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் ஆயிரக்கணக்கான போத்தல் கள் மதுசார உற்பத்திக்காக வழங்கப்பட்டு வந்தது. தற போது உற்பத்தி வீழ்ச்சியினால் கள் அருந்துவோருக்கே போதிய அளவு கள் வழங்க முடியாத நிலை தவறணைகளுக்கு ஏற்பட்டுள்ளது.

23 கள்ளுத் தவறணைகளில் 17 தவறணைகளே தற்போது இயங்கி வருவதாகவும், சாவகச்சேரி நகர், தனங்களப்பு, மறவன்புலோ, நாவற்குழி ஆகிய தவறணைகள் அதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளதாலும் தனகன்புலியடி தவறணை அமைந்த இடத்தில் படையினர் நிலை கொண்டுள்ளதாலும், வேம்பிராய் சந்தியில் தவறணை அமைக்க இடம் இல்லாததாலும் இவை செயற்பட முடியாதுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இயங்கும் 17 தவறணைகளுக்கும் எதிர்வரும் மார்ச் மாதம் தொடக்கம் ஏனைய சங்கங்களிலிருந்து கள் கொள்வனவு செய்து வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)

# சிறுவரின் இயல்பூக்கத்தை வளப்படுத்தும் செயற்பாட்டுப் பூங்கா



**தரம் ஒன்றில் மாணவர்கள் இணைந்து பாடசாலை ஒழுங்கமைப்பில் பிரவேசிப்பதை கல்வியமைச்சு கால்கோள் விழாவாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. இந்தக் கால்கோள் விழா இன்று நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் இடம்பெறுகிறது. இதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

**பராராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
**- ஆசிரியர், தீவக வலயம் -**

புதிய கல்விச்சீர்திருத்தத்தில் மாணவர்களின் உளமேம்பாடு குறித்து அதிக அக்கறை செலுத்தப்படுகிறது. இதன் அடிப்படையிலேயே 'புதிய கல்விச்சீர்திருத்தத்தில் செயற்பாட்டுப் பூங்கா!' என்ற எண்ணக்கரு உருவாக்கப்பட்டுள்ளது.

கற்றல் நிலையங்கள் அல்லது செயற்பாட்டு நிலையங்கள் என்பன சிறு குழுக்கள் அல்லது தனியொரு பிள்ளை சுதந்திரமாக ஒரு செயற்பாட்டில் ஈடுபடும் இடத்தைக் குறிக்கும். அந்தவகையில், புதிய கல்விச் சீர்திருத்த அமைப்பில் 'செயற்பாட்டுப் பூங்கா' குழந்தைகளின் கற்றலை விளையாட்டு உணர்வினூடாக இயங்கவைத்து அவர்களின் மனநிலையில் மகிழ்வையும் செயலூக்கத்தையும் மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

குழந்தைகள் தாமாக சுயமாக இயங்கவும், குழுவாகச் செயற்படவும் அதனூடாகப் பல்திறனுடைய அனுபவத் திறமையைக் கட்டியெழுப்பவும் செயற்பாட்டுப் பூங்கா உதவுகின்றது. குழந்தை உளவியலாளர்கள் புரோபல், றாசோ போன்றோரின் தத்துவத்திற்கு அமையப் பிள்ளைகளின் இயல்பூக்கத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் இச் செயற்றிட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

பாடசாலையிலுள்ள பிள்ளை தனது உறவை சுமுகமாகக் கட்டியெழுப்பவும், முன்பள்ளியில் இருந்து புதிதாகப் பாடசாலை ஒழுங்கமைப்புக்குள் செல்லும் பிள்ளைகளுக்கு ஒரு விருப்பத்தை ஏற்படுத்தும் தளமாகவும் 'செயற்பாட்டுப் பூங்கா' இடம்பெறுகின்றது. இதன் ஊடாகப் பிள்ளையின் மனதில் பாடசாலை மீதான ஓர் ஈர்ப்பையும், பாடசலைக்குச் செல்ல வேண்டும் என்ற ஊக்கத்தையும் சுயமாகக் கட்டியெழுப்ப முடிகிறது.

எமது பிரதேசத்தல் ஆரம்ப காலம் முதல் பல்வேறு விளையாட்டுக்கள் சமூக அமைப்பு, பிரதேச அமைப்பு என்ற பல்வேறுபட்ட காரணங்களினால் மாறுபட்டு வந்ததைக் காணமுடிகின்றது. சிறுவர்களுக்கு ஆரம்ப காலங்களில் வீட்டுச் சூழலில் விளையாட்டு முற்றம் இருந்ததையும், பொது இடங்களில் மைதானம் இருந்ததையும் இற்றைவரை நாம் அவதானிக்க முடிகிறது. இவை பிள்ளைகளின் விளையாட்டு ஆர்வத்தை மேம்படுத்தவும் ஓய்வுநேரத்தைப் பயனுள்ளதாக மாற்றவும் வழி ஏற்படுத்திக்கொடுத்துள்ளன.

அனைத்து சமூகங்களும் பல காலமாகப் பிள்ளைகளின் விளையாட்டை ஒரு பாரம்பரிய சிறுவர் பராமரிப்பாக வழங்கி வந்திருக்கின்றன. முக்கியமாக சுற்றாடலில் உடனடியாகக் கிடைக்கக்கூடிய பொருள்களையும் சந்தர்ப்பங்களையும் வழங்கினர். விளையாட்டுப் பொருள்கள் இயற்கையானவைகளாக அல்லது மனிதனால தயாரிக்கப்பட்டனவாக இருந்தன. பிரதான பாதுகாவலரான தாய், அவளுடைய நேரத்தின் பெரும்பகுதியைப் பிள்ளையுடன் கழிக்க முடிந்தது.

கடந்த சில தசாப்தங்களாக இந்த வாழ்க்கை முறை மாறிவிட்டது. தாய், தந்தையரின் வேலைப்பளு அதிகரித்துவிட்டது. அதன் விளைவாகப் பாரம்பரிய விளையாட்டுப் பொருளகளுக்கு மாற்றுத்தீர்வுகள் தோன்றின. ஆனால், அவை நல்லமுறையில் பரவவில்லை. பாரம்பரிய மற்றும் செலவு குறைந்த செயல்முறைகளுக்குப் புத்துயிர் அளிப்பதன் மூலம் 'செயற்பாட்டுப் பூங்கா' பயன்பாட்டுத் தன்மையினை மேலும் பாடசாலைகளில் விருத்திசெய்து கொள்ளமுடியும்.

'உறுதியான உடம்பிருந்தாலே உறுதியான மனம் உருப்பெறும்' எனனும் பொருள்படும் சொற்றொடரை ரோமர்கள் உருவாக்குவதற்கு வெகு காலத்திற்கு முன்பிருந்தே பிள்ளையின் உடல் மற்றும் உள வளர்ச்சிக்கு விளையாட்டு இன்றியமையாததென்பது அறியப்பட்டிருந்தது. நமது கலாசாரத்திலும் பிள்ளைகளின் விளையாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. 'ஓடிவிளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா' போன்ற பாடற் பிரயோகங்கள் இதனை வலியுறுத்துகின்றன.

## இயல்பூக்கங்கள்

சிறுவர்கள் விளையாட்டுத் தொடர்பாகப் பல இயல்பூக்கங்களைப் பெற்றுள்ளனர்.

சிறுவர்களுடைய இதயத்துடிப்பின் வேகம் சாதாரண மனிதனுடையதை விட அதிகமாகும். அதிக சக்தியைக் கொடுத்து அவர்களுடைய பெரிய தசைநார்களைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள். அதன்மூலம் அவர்கள் அதிக சுறுசுறுப்படைகின்றார்கள். அவர்கள் சம வயதுடையவர்களாக இருந தாலும் அவர்களின் தேவைகள் வேறுபட்டவையாகும். ஒரு பிள்ளை செய்கின்றளவு வேலையை இன்னொரு பிள்ளையால் செய்ய முடியாமல் இருக்கலாம். சம வயதுடைய பிள்ளைகளுடன் இப்பிள்ளைகள் சேர்ந்து விளையாட விரும்புகிறார்கள். அதேநேரத்தில் அவர்கள் தங்களுக்குள் சொந்தமாகவும் விளையாட விரும்புகிறார்கள். ஒரே செயற்பாட்டை நீண்டநேரம் பற்றிக் கொண்டிருப்பதைவிட விரைவில ஒரு செயற்பாட்டிலிருந்து இன்னொரு செயற்பாட்டுக்கு மாறுவதை சிறுவர்கள் விரும்புகிறார்கள்.

## செயற்பாட்டுப் பூங்கா

சிறுவர்களின் இயல்பூக்கங்களுக்கு செயற்பாட்டுப் பூங்கா பலவித சாதகத் தன்மைகளைக் கொண்டுள்ளது, விளையாட்டு, கூடிப்பழகுதல், ஆக்கத்திறன். சமூக உறவு ஆகியவற்றுக்கு வாய்ப்பளிக்கின்றது. பிள்ளைகளின் சமூக அறிவுத்துறை மேம்பாட்டில் விளையாட்டு அத்தியாவசியப் படிக்கல்லாக விளங்குகிறது. அவர்கள் விளையாட்டின் மூலம் சமுதாயத்தைப் புரிந்துகொள்ளும் அளவுக்கு முறைசார் கல்வி மூலம் அதனை அறிந்து கொள்வதில்லை. விளையாட்டின் மூலம், அவர்கள் சமூக நல்விளகத்தையும் தம் தொடர்பாடற் திறனையும் கூர்மைப்படுத்திக் கொள்கிறார்கள்.

சில நாடுகளில் பாடசாலைகளில் புத்தகப் படிப்புக்கே தேவைக்கதிகமான அழுத்தம் கொடுக்கப்படுகிறது. பெற்றோரும், ஆசிரியர்களும் பிள்ளைகளின் உண்மையான தேவைகளுக்கும், அபிலாஷைகளுக்கும் மதிப்புக் கொடுக்காது, அவர்களைப் பரீட்சைக்குத் தயார் செய்யுமுகமாகப் புத்தகப் படிப்பில் மட்டுமே கவனம் செலுத தத் தூண்டுகிறார்கள். பரீட்சைப் போட்டியே முக்கியமாகிறது. இதனால் பிரத்தியேக வகுப்புகள் போன்றவற்றிலும், வீட்டு வேலைகளிலும் பெருமளவு நேரத்தை சிறுவர்கள் செலவிட வேண்டியுள்ளது. விளையாட்டுக்கோ, ஓய்வுக்கோ அறவே நேரமில்லாது போய்விடுகின்றது. இதற்கு நமது நாடும் விதிவிலக்கல்ல. பிள்ளைகள் எந்நேரமும் புத்தகமும் கையுமாக இருப்பதை விடுத்து விளையாட்டு, சங்கீதம், நடனம். நாடகம் போன்ற பாடவிதானத்துக்குப் புறம்பான நடவடிக்கைகளில ஈடுபடல் வேண்டுமெனத் தூண்டுதல் ஆசிரியர்களின் வகிபாகங்களில் ஒன்றாகத் தற்போதைய கல்விக் கட்டமைப்பில் வலியுறுத்தப்படுகின்றது.

## நோக்கம்

'செயற்பாட்டுப் பூங்கா' பல பிரத்தியேக நோக்கங்களைக் கொண்டுள்ளது. சிறுவர்களின் தொடர்ச்சியாக வளரும் உடலுக்கும் வேகமாக வளர்ச்சியடையும் உள்ளத்திற்கும் இடையில் சமநிலையைப் பேணுதல், பெற்றோருடன் அதிக நேரத்தைக் கழிக்கின்ற பிள்ளைக்கு கிராமப் பாடசாலையில் மற்றப் பிள்ளைகளுடன் சேர்ந்து சந்தோஷமாக விளையாட சந்தர்ப்பமளித்தல், பாடசாலைக்குச் செல்ல காத்திருக்கும் கிராமத்து இளம் பிள்ளைகளுக்கும் பாடசாலைக்கும் இடையில் ஒரு தொடர்பை ஏற்படுத்தல் ஆகியவை செயற்பாட்டுப் பூங்காவின் பிரதான நோக்கங்களாகும்.

## விளையாட்டு

செயற்பாட்டு பூங்கா பல்வேறு வகையான விளையாட்டு ஒழுங்கமைப்பு முறைகளைக் கொண்டுள்ளது. நடத்தல், ஓடுதல், பாய்தல், ஏறுதல், நுழைதலும், தவழ்தலும், சமன்படுத்தல், திட்டமிட்ட விளையாட்டு ஆகியவையே அந்த ஒழுங்கமைப்புகளாகும்.

## இடவமைப்பும் ஒழுங்கும்

தரம் 1, தரம் 2 வகுப்புக்களுக்கு அண்மையில் 'செயற்பாட்டுப் பூங்கா'வுக்கான இடம் இருக்க வேண்டும்.

நிலப்பிரதேசம் ஆகக்குறைந்தது 200 சதுரமீற்றர் இருக்க வேண்டும். ஆனால், அது ஒரு நீள் சதுரமாக இருக்க வேண்டும் என்ற கட்டாயமில்லை.

அது குழிகள் இல்லாத மட்டமான தரையாக, வேர்கள் அகற்றப்பட்டதாக கூழாங்கற்கள் மற்றும் தீங்கு ஏற்படுத்தக்கூடிய ஏனைய பொருள்கள் இல்லாததாக இருக்கவேண்டும். இயற்கையாக மேற்குறிப்பிட்ட நிலையில் இல்லாவிட்டால் அதை அந்த நிலையில் அமைத்துக்கொள்ள முயற்சியெடுக்க வேண்டும்.

அது காய்ந்த பகுதியாக இருக்க வேண்டும். மழை பெய்தால் சேறாகி விடாத நிலமாக இருக்கவேண்டும். அந்த இடம் நுளம்புகள், பாம்புகள் போன்ற தீங்குவிளைவிக்கும் ஜீவராசிகளும் விலங்குகளும் இல்லாத இடமாக இருக்க வேண்டும்.

ஏனைய முற்றத்திலிருந்து இந்தப் பகுதி பிரிந்து வேறுபட்டதாக இருப்பதும் இந்தப் பூங்காவின் ஒரு பகுதியாக நிழல்தரக் கூடிய சில மரங்கள் இருப்பதும் நல்லது.

## எதிர்கால பயன்நிலை

வெறும் 'செயற்பாட்டுப் பூங்கா"வை அமைப்பதன் மூலம் மட்டும் நாம் திருப்தி அடைந்துவிடலாகாது. அதைப் பராமரிப்பதற்கான ஒழுங்குகளையும் செய்யவேண்டியது முக்கியமாகும். காலநிலைக் காரணிகள் பூங்காவின் மகிழ்ச்சிகரமான தோற்றத்திற்கும் பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிக்கலாம். புதிய புற்கள் வளரும், மண் அரிப்பினால் குழிகள் தோன்றியிருக்கும். இவற்றை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 'செயற்பாட்டுப் பூங்கா'வில் உள்ள விளையாட்டுப் பொருள்களைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதால் அவை பழுதடையலாம் அல்லது தரம் குறையலாம். அவை உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

பிள்ளைகளிடம் வளர்ச்சி ஏற்படுகின்ற போது 'செயற்பாட்டு பூங்கா'வை ஆரம்பிக்கும் போது வழங்கிய உபகரணங்கள் காலத்திற்கு ஒவ்வாதவையாக இருக்கலாம் அல்லது பொருத்தமற்றவையாக இருக்கலாம். அவற்றை அகற்றுவதற்கு ஒருபோதும் தயங்கககூடாது. 'செயற்பாடுப் பூங்கா'வின் ஒரே விதமான விளையாட்டுக்கள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தாது. அவர்கள் சுவாரசியத்தை இழந்துவிடுவார்கள். எனவே புதிய செயற்பாடுகள் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். பிள்ளைகளுக்குச் சவாலாக இருக்கும் விடயங்கள் அவர்களை சுறுசுறுப்பாகவும் சந்தோஷமாகவும் வைத்திருக்கிறது. இதனைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

## சமகால நோக்கு

பிள்ளைகளின் தேக, மன ஆரோக்கியத்துக்கு விளையாட்டு இன்றியமையாததாகும். விதிவிலக்கான சந்தர்ப்பங்களிலே, பிள்ளைகள் போரினால் ஏற்படும் மன அழுத்தங்களைச் சமாளிப்பதற்கும, துயர உணர்வுகளிலிருந்து விடுபடுவதற்கும் விளையாட்டும் வாசித்தல் அல்லது வரைதல் போன்ற நடவடிக்கைகளும் பயன்படுகின்றன. இது தொடர்பாக சமீபத்திய உதாரணங்கள் பலவற்றை இங்கு குறிப்பிடலாம். கொசோவோ பகுதியிலிருந்து புலம்பெயர்ந்த பிள்ளைகளுக்கென அல்பேனியா நாட்டிலே 'சிறுவர் நேய இடங்கள்' உருவாக்கப்பட்டன. இவ்விடங்களில் பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் யாவும் பூர்த்தி செய்யப்படுவதுடன் தாம் விரும்பிய நேரங்களில் விளையாடுவதற்கேற்ற வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டன.

உலகின் பல பாகங்களிலே பிள்ளைகள் ஓய்வின்றி உழைக்கும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். விளையாட்டுக்கோ, ஓய்வுக்கோ அவர்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. சில பிள்ளைகள் ஏனையோரைப் பார்க்கிலும் மோசமான நிலையில் உள்ளனர். சிறுமிகளுக்கு சிறுவர்களைப் பார்க்கிலும் கூடுதலான வீட்டுப்பணிகள் அதனால் கிடைக்கும் நேரம் சொற்பமே.

பிள்ளைகள் வளர்ச்சியடைகின்ற போது செயற்பாடுகளில் அவர்கள் காட்டுகின்ற விருப்பமும் படிப்படியாக வேறுபடுகின்றது. பெரும்பாலும் வாய்ப்புகளை சுதந்திரமாகப் பெறுகின்ற போது அபிவிருத்தி ஏணியிலே சில செயல்திறன்களை கைவிட முனைகின்றனர். திட்டமிட்ட நிகழ்ச்சியுடன் முழுமையான விளையாட்டு இருக்கின்றபோது அதில் பிள்ளையின் இலகுவான வளர்ச்சியும், படிப்படியான வளர்ச்சியும் உறுதிப்படுத்தப்படுகிறது.

நமது பிள்ளைகள் ஒழுங்குமுறையாக ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி வர பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு மட்டங்களில் விளையாட்டு முறையில் அமைந்த செயற்பாடுகள் அவசியமாகின்றன. பிள்ளைகளின் இயல்பூக்கங்களுடன் இணைவுற்ற வகையில் ஆசிரியர் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாட்டை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல் அவசியமாகின்றது. மகிழ்ச்சிகரமான செயலூக்கமுள்ள வகுப்பறையாக அமைய விளையாட்டு முறையில் அமைந்த கற்பித்தல் உத்திகளும், 'செயற்பாட்டுப் பூங்கா' தளமும் சமகால கல்வியின் செயற்றிட்டங்களில் வலியுறுத்தப்படுகின்றன. பாடசாலைப் பிரவேசங்களை மகிழ்வுள்ளதாக மாற்றியமைப்பதில் செயற்பாட்டு பூங்காவின் வகிபாகமும் முக்கிய பங்காற்றுகின்றது எனலாம்.

## யாழ்/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

### நூற்றாண்டு நிறைவு அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

கல்லூரியின் நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்வு தொடர்பாக யாழ்ப்பாணம் மின்னகத்தின் ஆதரவுடன் 15.01.2004ஆம் திகதி பி.ப.4.00 மணிக்கு நடைபெற்ற அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு - இல. 13252
இரண்டாவது பரிசு - இல. 04674
மூன்றாவது பரிசு - இல. 02043

ஆறுதல் பரிசுகள் :

| | |
|---|---|
| 01. இல. 02360 | 06. இல. 20157 |
| 02. இல. 17884 | 07. இல. 14099 |
| 03. இல. 21816 | 08. இல. 31182 |
| 04. இல. 17025 | 09. இல. 08316 |
| 05. இல. 31303 | 10. இல. 07537 |

தலைவர்,
நூற்றாண்டு விழாச்சபை,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(சி-32805) (11-16)


# கிட்டு ஓர் அரசியல் ஞானி

ஆயுதப் போராட்டம் உச்சக்கட்டத்தில் இருந்த வேளையிலும் சமாதான வழியில் தமிழ் மக்களின் உரிமைகள் கிடைக்குமாயிருந்தால் அதனை ஏற்று, உரிமையை வென்றெடுக்க வேண்டும் என்பதில் நம்பிக்கை கொண்டு செயற்பட்ட வீரன் கிட்டு.

வங்கக் கடலில் இந்திய வல்லாதிக்கத்தின் சதி முயற்சியினால் தன்னைத்தானே அழித்துக்கொண்ட கேணல் கிட்டுவினதும் அவருடன் கூடிய ஏனைய போராளிகளினதும் பதினொராவது ஆண்டு நினைவுநாள் இன்றாகும்.

கிட்டு என்ற பெயர் கேட்டாலே சிங்கள இராணுவம் கிலி கொண்டிருந்த காலகட்டம் ஒன்று இருந்ததை இன்று வரை சிங்கள இராணுவம் மறக்க மாட்டாது.

கிட்டு ஒரு திறந்த புத்தகம். கிட்டு எதிரிக்கு எப்படி சிம்ம சொப்பனமாக இருந்தானோ? அதற்கு எதிர் மாறாகத தமிழ் மக்களின் நெஞ்சங்களில் பூவாக மலர்ந்து நிற்கின்றான்.

யாழ். குடாநாட்டில் இராணுவம் திமர் சுற்றிவளைப்புக்கள், வீதிகளில ரோந்துகள், துன்புறுத்தல்கள் என்று பல்வேறு துன்பங்களையும் மக்களுக்கு ஏற்படுத்திக்கொண்டிருந்த காலகட்டம் அது. இக் காலகட்டத்தில் முதற்றடவையாக பொலீஸ் நிலையம் ஒன்று தாக்குதலுக்குள்ளாகின்றது.

யாழ். குடாநாட்டின் முக்கிய பாதுகாப்பு நிறைந்த யாழ்ப்பாணம் பொலீஸ நிலையம் தகர்க்கப்படுகின்றது. சம்பவம் இரவு நடந்தது. அதிகாலை மக்கள் சந்திக்குச் சந்தி வந்து என்ன நடந்தது என்று தெரியாத நிலைமை.

இந்நிலையில், குருநகர் பகுதியில இருந்த இராணுவ முகாமிலிருந்தோ, பலாலி இராணுவ முகாமிலிருந்தோ இராணுவம் வெளியேறி இந்த பொலீஸ நிலையத்திற்கு வரமுடியாத வகையில் விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு யாழ். குடாநாட்டில் முதற்றடவையாக கிட்டுவினால் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

மன்னாரில் லெப்டினன்ட் கேணல் விக்ரரினால் கைப்பற்றப்பட்ட இராணுவத்தினரின் உடல்களையும் உயிருடன் பிடிக்கப்பட்ட இராணுவ வீரர்களையும் யாழ். குடாநாட்டிற்குக் கொண்டுவந்து எதிரியையும் கூடமதித்து இராணுவத்துடன் கதைத்து இராணுவ வீரர்களின் உடலை கோட்டையில் இருந்த கப்டன கொத்தலாவலையிடம் கையளித்து தனது மனிதாபிமானத்தையும் புலிகள எதிரியைக்கூட எவ்வாறு மதிக்கின்றனா என்பதையும் முழு உலகிற்கும் வெளிப்படையாக எடுத்துக்காட்டியவன் கிட்டு.

யாழ். குடாநாட்டைச் சுற்றி இராணுவ முகாமகளும, பொலீஸ் நிலையங்கள் நிறைந்து காணப்பட்ட காலம் அது. எதிரி எம்மண்ணில் நடமாடக் கூடாது, மக்களைத் துன்புறுத்தக் கூடாது என்ற அடிப்படையில் யாழ். குடாநாட்டிலிருந்த அனைத்து இராணுவ, கடற்படை, விமானப்படை முகாம்களையும் முடக்கி யாழ். குடாநாட்டை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்த பெருமையும் கிட்டுவுக்கே உரியதாகும்.

வடக்கு - கிழக்கு என்பதை உள்ளடக்கி ஒரு தமிழீழம் அமையுமாக இருந்தால் நாட்டின் பொருளாதாரம் என்னவென்று பல இயக்கங்களும் குழம்பி குதர்க்க நியாயங்களை முன்வைத்துக் கொண்டிருந்த நேரத்தில், மக்களின் எதிர்காலம் நோக்கி என்ற ஒரு பாரிய கண்காட்சியை அன்றைய மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் மேஜர் முரளி, அரசியல்துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் தீலிபன் ஆகியோர் மூலம் செயற்படுத்தி எம் மக்களின் சிந்தனையைத் தூண்டி, வழிகாட்டி, ஒளி காட்டி நின்றவ்தான் கிட்டு.



எதிரிகளின் சூழ்ச்சியினால் கிட்டு தனது ஒரு காலை இழந்தார். எதிரிக்கு அது வெற்றியாக அமையும் என்று எதிர்ப்பார்க்கப்பட்டது. இந்நிலைமையில், கோட்டை முகாமிலிருந்து இராணுவம் வெளியேற வழமைபோன்று முயற்சித்து நின்றது.

ஆனால், கால் போனாலும் கூட நண்பனின் உதவியுடன் யாழ் நகருக்கு நுழைந்த கிட்டு தனது சக போராளிகளுக்கு கட்டளைகளை வழங்கி, எதிரியைப் பின்வாங்கச் செய்து மீண்டும் முகாமில் முடங்கச் செய்தான். தமிழ் மக்களை நிம்மதியடையச் செய்தான்.

கிட்டுவைப் வெறும் போராளியாக மட்டும் நோக்கமுடியாது. அவன் சிறந்த கலைஞனும்கூட. இந்தவகையில் புகைப்படக் கலை, வீடியோக் கலை மற்றும் கவிதை, கட்டுரை என்று பல விடயத்திலும் கிட்டு கால்பதித்துள்ளான்.

வெளிநாடுகளுக்கு அரசியல் விடயங்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டபோது, அந்தக் கடமையையும் கட்சிதமாக நிறைவேற்றினான்.

இந்த வகையில் பிரான்ஸ், ஜேர்மனி, கனடா, லண்டன் என்று தமிழ்மக்கள உள்ள நாடுகளிலும் கூட தமிழர்களுக்கான நூல்களையும், பத்திரிகைகளையும் ஸ்தாபித்து தமிழீழத்திற்கான நடவடிக்கையை துரிதமான முறையில் மேற்கொண்டவன் கிட்டு.

சமாதானக்குழுவின் சமாதானத் திட்டத்தை எடுத்துவரும் வழியில் சாத்வீகம், அஹிம்சை எனக்கூறிக்கொள்ளும் இந்திய அரசின் சதியினால் நடுக்கடலில் விடுதலைப் புலிகளின் மரபுக்கிணங்க கிட்டுவும் ஏனைய போராளிகளும் கப்பலையும் அழித்து தங்கள் இன்னுயிரையும் ஈந்து வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்கள்.

1977ஆம் ஆண்டு அன்றைய பிரதம மந்திரி ஜே.ஆர்.ஜெயவர்த்தன, நாடாளுமன்றில் போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம் என்று கூறி அப்பாவித்தமிழ் மக்களின் உயிர்கள், உடைமைகளை அழிக்க வித்திட்டார். கேணல் கிட்டுவைப் பொறுத்தவரையில் ஆயுதப் போராட்டம் என்றால் போராட்டம், சமாதானம் என்றால் சமாதானம் என்பதில் தெளிவான சிந்தனையுடன் செயற்பட்ட அரசியல் ஞானி ஆவான். ★

நவம்


# 1வது பிறந்தநாள் வாழ்த்து

## கிஷானி



16-01-2004

Swiss ஐ சேர்ந்த விஜயகுமார் குணாம்பிகை தம்பதிகளின் செல்வப்புதல்வி கிஷானி தனது பிறந்தநாளை Kondavil இல் உள்ள தனது இல்லத்தில் மிகச்சிறப்பாக கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, மற்றும் (Canada) அப்பப்பா, அப்பம்மா, (Kondavil) அம்மப்பா, அம்மம்மா, மற்றும் பெரியமாமா, மாமி, மச்சாள்மார், சின்னமாமா, சித்திமார், (Swiss) மாமா, மாமி, மச்சாள், மச்சான், (Sweeden) மாமா, மாமி, மச்சாள்மார், (Canada) பெரியப்பா,பெரியம்மா, அண்ணா மற்றும் உற்றார் உறவினர் அனைவரும் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

அன்புடன்
விஜயகுமார்(அப்பா) சுவிஸ்
இரத்தினசபாபதி (அம்மப்பா) கோண்டாவில்.

நெட்டிலிப்பாய் வீதி,
கோண்டாவில்.

COC Graphics-Onurit



# சனிக்கிழமை அதிர்ஷ்டம்







உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2302942 இருந்து
2320936 வரை
சீட்டிழுப்பு இல. 1470
திகதி 14.01.2004

## வெற்றி எண்கள்

**03 18 20 36 44** போனஸ் எண் **27**

## ஜக்பொட் பரிசு

## ரூபா.6,346,000/- வெல்லப்பட்டது

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 6,348,000/-. | 6,346,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 114 | 10,000/- | 1,140,000/- |
| 3 | 5,599 | 500/- | 2,799,500/- |
| 2 | 94,615 | 20/- | 1,892,300/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 03ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 115,620 | 10/- | 1,156,200/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.13,634,000/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்

## ரூபா.1,500,000/-

தொடர் இல. 3275070க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2004 ஜனவரி 17ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2311360-3-80
2309611-8-37
2315640-3-42
2303929-8-34
2309551-8-91

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சரஸ்வதி இராசதுரை

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், உரும்பிராய் தெற்கில் வசித்தவரும் தற்போது இணுவில் கிழக்கில் வசித்து வந்தவருமான சரஸ்வதி இராசதுரை 12.01.2004 திங்கட்கிழமை இரவு 11.30 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற உரும்பிராய் வைரவப்பிள்ளை இராசதுரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திரு.திருமதி வைரவப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகளும் சிவகுமாரன் (சுவிஸ்), வாசுகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற திரு.திருமதி செல்லத்துரை அவர்களின் மகளும் காலஞ்சென்ற இலங்கைநாதன் மற்றும் சின்னராசா, காலஞ்சென்ற அழகரத்தினம் மற்றும் மகேஸ்வரி, செல்வரத்தினம் (அம்மா அச்சகம், இணுவில்), ஞானமணி, இந்திராணி, அருளானந்தசிவம் (ஜேர்மனி), பத்மானந்த தேவி, மல்லிகாதேவி, ஸ்ரீ கிருஸ்ணராசா, சுபத்திராதேவி ஆகியோரின் சகோதரியும் கௌரி, பாலநாதன் ஆகியோரின் அன்பு மாமியும் அபிநயா, ஆரபி (சுவிஸ்), தருன், தக்ஷா (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2004) வெள்ளிக்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
*இணுவில் கிழக்கு.* (27196) (26-11-16) இ.சிவகுமாரன் (மகன்)

## கபிரியேல் அந்தோனிப்பிள்ளை
### (சின்னண்ணன்)

தாளையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் அந்தோனிப்பிள்ளை 12.01.2004 திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.01.2004) சனிக்கிழமை புதிய நேரம் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியின் பின்னர் தாளையடி சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்பு மனைவி
அ.ஆகத்தம்மா.

*'உதயகம்'*
*தாளையடி வடக்கு,*
*தாளையடி.* (சி-32803)(11-16)



சுவாமியே சரணம் ஐயப்பா


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.குடாநாட்டில் தகுந்த அமைப்புடன் ஐயப்ப வழிபாட்டினை, நாம் தொடர முடியாது அல்லற்பட்ட வேளை எமக்கு குருதேவராக நல்வழிகாட்டி எம்மையும் இன்னும் பல ஐயப்ப சுவாமிமார்களையும் புனித சபரிமலைக்கு அழைத்துச் சென்று சபரிராஜாவை தரிசனம் செய்து வைத்தும் யாழ்ப்பாணம் கோண்டாவிற் பதியில் பதினெட்டுப்படியுடன் கூடிய ஸ்ரீசபரீச ஐயப்ப தேவஸ்தான பீடாதிபதி குருசுவாமி கிருஷ்ணமூர்த்திக் குருக்கள் ஹரிஹரசுதசர்மா அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். அத்துடன் இன்னும் அவரது ஐயப்பப்பெருமானின் பணிகள் தொடர சபரீசன் பாதம் பணிந்து வேண்டுகின்றோம்.

சுவாமியே சரணம் ஐயப்பா.

மராஜசேகர் (சாந்துமணிசாமி) குடும்பத்தினர்.
கி.மகேஸ்வரன் (மகேஸ்சாமி) குடும்பத்தினர்.

(27206)(36-11-16)

"பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு" நூல் வெளியீட்டு விழாவில் மூத்த எழுத்தாளர் தி.ச. வரதராஜன் (வரதர்) ஆசியுரை நிகழ்த்துவதையும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். கலாநிதி க.குணராஜா, 'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன், நூலாசிரியர் எஸ்.எம் கோபாலரட்ணம் (கோபு) , கூட்டுறவாளர் சி.சிவமகாராசா, பேராசிரியர் அ.சண்முகதாஸ், மூதறிஞர் க.சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம் : அலுவலகப் படப்பிடிப்பாளர்.)*

# சிறப்புற நடைபெற்ற நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.16

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம். கோபாலரட்ணம் (கோபு)எழுதிய 'பத்திரிகைப் பணியில் அரை நூற்றாண்டு' என்ற நூல் வெளியீட்டு விழா நேற்றுப் பிற்பகல், யாழ்.நாவலர் கலாசார மண்டபததில் சிறப்புற இடம் பெற்றது.

கூட்டுறவாளர் சி.சிவமகாராசா தலைமையில் நூல்வெளியீட்டு விழா நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில், மங்கள விளககினை யாழ்.பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அசண்முகதாஸ், மூதறிஞர் க.சொக கலிங்கம்(சொக்கன்), கலாநிதி க.குணராசா, மூதத எழுத்தாளர் தி.சவரதராஜன (வரதர்) ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழ்த்தாய்வாழ்த்து, ஆசியுரை என்பவற்றைத் தொடர்ந்து வாழ்த்துரைகளை பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும மூதறிஞர் க.சொக்கலிங்கம் (சொக்கன்), புலவர் ம.பார்வதிநாதசிவம் பேரா சிரியர் இரா.சிவசந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

'உதயன்' பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் நூலின்வெளியீட்டுரையை நிகழத்த நூல் ஆய்வுரையை கலாநிதி க.குணராசா வழங்கினார். 'தைபிறந்து தமிழருக்கு வழி பிறக்குமா' என்ற தலைப்பில் தமிழ்க் கூட்டமைப்புப் பிரமுகர் என்.ஸ்ரீ காந்தா சிறப்புரையாற்றினார்.இநநிகழ்வில், ஊடகவியலாளர்கள், பொது மக்கள் எனப்பலரும கலந்துகொண்டனர்.

## மலர் வெளியீடு

இளவாலை காடிவளை இந்து இளைஞர் சனசமூக நிலையத்தின் பொன் விழா மலர் வெளியீட்டுவிழாவும், பட்டிப் பொங்கல் விழாவும் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நிலையத் தலைவர் செ.மாவிரதன் தலைமையில் நடைபெறவுள்ளன. வலி.வடக்கு பிரதேச செயலாளர் கலாநிதி க.குணராசா, முன்னாள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரீவீகிருஷ்ணசாமி, ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர். (எ-135)


# கண்ணீர் அஞ்சலி

## செல்வன பேரானந்தம் உமாசுதன்

15.01.2004 நேற்று அகாலமரணமடைந்த உடற் கல்விற் துறை இரண்டாம் அணியைச் சேர்ந்த செல்வன் பேரானந்தம் உமாசுதன் அவர்களிள் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கிறோம்

இரண்டாம் அணி,
உடற்கல்வித் துறை
மாணவர்கள்.

*யாழ்.பல்கலைக்கழகம்.* (27204)(3611-16)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இராசையா துரைராஜா

ஆயிரம் உறவுகள் அவனியில் இருந்தும்
அன்புடன் அரவணைக்க
அன்புள்ளங்கள் இருந்தும்
அய்யா என்றழைக்க
யார் இருப்பார் எமக்கு?
ஓடிய காலமதில்
ஒரு மாதம் ஆனதையா
நாம் உள்ளவரை
என்றும் உங்களின்
பசுமையான நினைவுகளுடன் ....

தோற்றம்: 10.01.1942 மறைவு: 16.12.2003

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*68,உடுவில் வீதி, மானிப்பாய்.* (27201)(36-11-16)

# கண்ணீர் அஞ்சலிகள்





**பேரானந்தம் உமாசுதன்** (போட்டோ சுதன்) **சிறிபால கணேசமூர்த்தி** (சுதாகர்-மேனன்)

மறைவு
15.01.2004

எமது ஆலயத்தொண்டர் குழுவைச் சேர்ந்த
செல்வன் பேரானந்தம் உமாசுதன் ,
செல்வன் சிறிபால கணேசமூர்த்தி சுதாகர்
அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு இவர்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வரதராஜவிநாயகர்
ஆலய தொண்டர் படை.

*மாலுசந்தி,* (27202)(36)

# மரண அறிவித்தலும் நன்றி நவிலலும்

## திருமதி பாலசிங்கம் சத்தியேஸ்வரி

(முன்னாள் தாதி மெக்லியேட் வைத்தியசாலை இணுவில், சென்றல் நேசிங்கோம்)

14.01.2004 அன்று காலமான அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொக்குவில் இந்து மயானத்தில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்ட உற்றார்,உறவினர், நண்பர்களுக்கும் மற்றும் அன்னார் சுகவீனமுற்று வைத்தியசாலையில் இருந்தவேளை இறுதிவரை உதவி புரிந்த வைத்தியசாலை ஊழியர்கள் அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பி எமது துக்கத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அத்துடன், குறுகிய நேரத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்ற காரணத்தால் உரிய நேரத்தில் அறிவிக்கத்தவறிய உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

*72/4, பலாலி வீதி, கந்தர்மடம்.* (27205)(36-11-16)

தகவல்:
குடும்பத்தினர்.

# கணக்கீடு

2005, 2006 பிரத்தியேக,
குழு வகுப்புக்கள்
(வீட்டில்
வந்தும் கற்பிக்கப்படும்)

வ.ஸ்ரீகரந்தன்

வ. ஸ்ரீவத்ஸம்
முனியப்பர் கோயில்முன்பாக,
கே.கே.எஸ்.வீதி,
கோண்டாவில் (27051)

ராஜா யாழ்ப்பாணம்

பிரசாந் நடித்த

(சீல்ஸ்)

காட்சி நேரம்
10.30, 2.30, 6.30,9.30 (பு.நே.) (சி-32369) (32)

நிறைஞ்சனாஸ் சங்கானை

சரண், வீராநாயகனி நடித்த
உன்னை சரணடைந்தேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
Tomv Raider - 2
(C-32370) (32)

லிபேட்டி அச்சுவேலி

பிரசாந் நடித்த
"வின்னர்" (சீல்ஸ்)
தினசரி : 2.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 3.00,7.00 (பி.நே.)
(C-32371) (32)

நாகம்ஸ் சுன்னாகம்

இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி (சண்டியர்) (ரீல்ஸ்)

ஆசனப்பதிவுகளுக்கு ரட்ணம்ஸ் பார்ட்டா
யாழ்ப்பாணம்
T.P.: 021-222 2917
நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
T.P: 060 221 2779
வீடியோ ஆனந் - மானிப்பாய்
T.P.: - 021-2222889
நாகம்ஸ் திரை அரங்கம்,
சுன்னாகம்.



# மரண அறிவித்தல்கள்

## திருமதி கலாதேவி கஜேந்திரகுமார்

மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாதேவி கஜேந்திரகுமார் 13.01.2004 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் திருமதி சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மகளும் கஜேந்திரகுமாரின் பாசமிகு மனைவியும் செல்லத்துரை - காலஞ்சென்ற திருமதி செல்லத்துரை ஆகியோரின் மருமகளும் கஜிதன், கஜுஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சூரியகுமார் (கனடா), சந்திரகுமார்(ஜேர்மனி), ஆனந்தகுமார்(ஆசிரியர்), கௌரி(மூளாய்), பிறேம்குமார்(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(17.01.2004) சனிக்கிழமை ஜேர்மனி நேரப்படி பி.ப. 2.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மூளாய் றோட், சுழிபுரம்.* (27199)(36-11-16)

தகவல்:
க.செல்லத்துரை
(மாமனார்).

## திருமதி சிவநேசபிள்ளை இராசம்மா

வேலணை வடக்கு, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல, 228, நாவலர் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவநேசபிள்ளை இராசம்மா நேற்று (15-01-2004) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - நாகம்மாவின் மகளும் காலஞ்சென்ற சிவநேசபிள்ளை( முன்னாள் பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபன ஊழியர்)யின் அன்பு மனைவியும் கனகம்மாவின் அன்புச் சகோதரியும் தர்மராணி(பிரான்ஸ்), இந்திராணி(அதிபர், யா/வேலணை ஆத்திசூடி வித்தியாலயம்), செல்வராணி, காலஞ்சென்ற சிவலிங்கம் விஜயலட்சுமி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் மகேந்திரன்(பிரான்ஸ்), சிவதாஸ் (சாளி நகையகம், யாழ்ப்பாணம்), இராசேந்திரம் (N.T.R ரான்ஸ்போட்), கர்ணன்(பிரான்ஸ்) ஆகியோரின் அருமை மாமியாரும் ரவீந்திரன், வதனி, சிவாஜினி, சஞ்சயன், ஜனார்த்தனி, மாலினி, சாம்பவி, பிரணவி, தாரணி, கீர்த்தனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஷர்மிலனின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2004) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(N.T.R.)*
*228, நாவலர் வீதி, இலுப்பையடி, யாழ்ப்பாணம்.* (27200)(36-11-16)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

## திருமதி ஆச்சிமுத்து அப்பாத்துரை

அராலி தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி ஆச்சிமுத்து அப்பாத்துரை 15.01.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரையின் அன்புத் துணைவியும் அ.மகாலிங்கம்(இளைப்பாறிய வைத்திய கலாநிதி), அ.சுப்பிரமணியம் (கணக்காளர்), காலஞ்சென்ற அ.மாசிலாமணி(பொறியியலாளர்), காலஞ்சென்ற அ.இரத்தினம்( தபாலதிபர்), அ.கணேஷ்(கணக்காளர்), அ.குணசிங்கம்( ஆசிரியர், யாழ்.இந்துக்கல்லூரி), திருமதி. ந.ஜீவரத்தினம் ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ம.மகேஸ்வரியம்மா, காலஞ்சென்ற திருமதி சு.வாமதேவி, திருமதி மா.கமலாம்பிகை, திருமதி இ.புவனேஸ்வரி, திருமதி க.விமலாதேவி, கா.நடராஜா(ஓய்வுபெற்ற அதிபர்), திருமதி கு. தவபாக்கியம் ஆகியோரின் அன்பு மாமியாரும் இந்திராதேவி, சுந்தரலிங்கம், பரமலிங்கம், கிருஸ்ணலிங்கம், பிரதீப், பிரகாஷ், பிரகலாத், கேசவன், ஜெகன்னாதன்(மஸ்கன் லிமிட்டட்), சாந்தினி, பிரியதர்ஷினி, சுசித்திரா, சுபாஜினி, கிரிஸாந்மோகன், பிரியா, திலீபன்(இயன் மருத்துவம், பொது வைத்தியசாலை, கொழும்பு), சயந்தன் (யாழ்பல்கலைக்கழகம், 2 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவன்), வானதி, கௌதமன், ஜீவகி, அமரேஷ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.01.2004) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக கிரியைக்காக அராலி தெற்கு பூணாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.* (27203)(36-11-16)

தகவல்:
பிள்ளைகள்

## ஈர்க்கு வாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒழுங்கையில் இளைஞர்கள் சிலா கூட்டமாக நின்று வாணம் கொளுத்தி விளையாடிக்கொண்டிருந்தனா எனவும், அவர்களால் கொளுத்தப்பட்ட ஒருவாணமே பெண்ணின் கண்ணைப் பதம் பார்த்தது என்றும். கூறப்பட்டது.

இதேவேளை, உரும்பிராய் கிழக்கில் லிங்கநாதன் மிதுனன் (வயது-11) என்ற சிறுவனும், பிரான்பற்றுப் பகுதியில் புவனேந்திரன் லோஜீவன் (வயது-2) என்ற சிறுவனும் பட்டாசுவிபத்துக்களினால கண்ணில் காயமடைந்தனா.

இதற்கிடையில், தைப்பொங்கல் திருநாள் குடாநாட்டு மக்களால் நேற்று சிறப்பாகக்கொண்டாடப்பட்டது.

இந்து ஆலயங்கள் பலவற்றில் நேற்று விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.பொது இடங்கள் பலவற்றிலும் பொங்கல் விழாக்களும கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. குடாநாடு பூராகவும் நேற்று முழு நாளும் பட்டாசுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

(எ-4-5-7-15-86-135-173-76-70)

## பிரதமர் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இ.தொ.க. உறுப்பினர்கள் கலந்து கொள்வதில்லை எனக் கட்சியின் உயா மட்டம் முடிவுசெய்திருப்பதாக நம்பத் தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றைய பொங்கல் நிகழ்வில் வேலாயுதம் எம்.பி.கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியக்கடவுச்சீட்டு பெற்றவர்களுக்கான இலங்கைப் பிரஜாவுரிமை விண்ணப்பமாதிரிப் படிவங்கள் இதொ.கா வினால் அண்மைக்காலமாக விநியோகிக்கப்பட்டன. இதற்கு கடும் ஆட்சேபம் தெரிவித்தும் விமர்சித்தும் கருத்துக்களைத்தெரிவித்த கே.வேலாயுதம் எம்பியுடன் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகவே இ.தொ.காவினா நேற்றைய நிகழ்வில் பங்குபற்றாமல் அங்கிருந்து வெளியேறினர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் இ.தொ.காவின் மத்திய மாகாணசபையின் கல்வி அமைச்சர் பெ.இராதாக்கிருஷ்ணன் நிகழ்வில் இறுதிவரை கலந்து கொண்டார் எனத தெரிவிக்கப்பட்டது.

## எழுச்சி நிகழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புரையாற்றவுள்ளனர்.

இந்த நிகழ்வு குறித்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

"அடக்குமுறைக்குள் வீழ்ந்த தமிழினம் அடக்கு முறையை உடைத்துக்கொண்டு தமது அபிலாஷைகளை உலகுக்கு உணர்த்தியதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் புதிய அத்தியாயத்தைப் படைத்த வரலாற்று நிகழ்வுதான் பொங்குதமிழ்". என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வரலாற்று எழுச்சி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் அதில் வேண்டுகோள்விடுக்கப்பட்டுள்ளது.

(எ-4)

## அதிகாரம் மிக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும், பிரதமருக்குமிடையில் இருந்து வரும் அரசமைப்புச் சட்ட நெருக்கடியில் தலையிட நாம் விரும்பவில்லை. சிங்களத் தலைமைத்துவத்தினால் இந்த நெருக்கடி தீர்க்கப்படும் வரை காத்திருக்க நாம் தயார்.

அதுவரை போர் நிறுத்த ஒப்பந்தத்தின் விதிகளையும் நிபந்தனைகளையும் நாம் கட்டாயமாகக் கடைப்பிடிப்போம். சமாதானத்தையும் பேணி வருவோம்"

- இவ்வாறு புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் நோர்வே அரசின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்மிடம் உறுதியளித்திருக்கிறார்.

இவ்வாறான ஓர் உறுதி மொழியை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கடந்த புதனன்று நோர்வே தூதுவர் ஹன்ஸ் பிரட்ஸ்கரிடம் கிளிநொச்சியில வழங்கியது தெரிந்ததே.

## குளிக்கச் சென்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வும் கூறப்பட்டது.

- இவ்வாறு இழுத்துச்செல்லப்பட்ட மூவரையும் காப்பாற்றுவதற்கு அவர்களுடன் கூடச்சென்ற இளைஞர்கள், அப்பகுதி பொதுமக்கள் அங்கிருந்த படையினின் உதவியுடன் பலத்த முயற்சிகளை மேற்கொண்டனர். எனினும் மூவரில் ஒருவர் மட்டுமே காப்பாற்றப்பட்டார். ஏனைய இருவரையும் சடலங்களாகவே மீட்கமுடிந்தது.

காப்பாற்றப்பட்ட பிரசாத் என்ற இளைஞர் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவர்களின் சடலங்களும் மந்திகை ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் நேற்றிரவு 7 மணியளவில் பருத்தித்துறை நீதிமன்ற பதில நீதிவான் ந.தங்கராஜ ஆஸ்பத்திரிக்குச் சென்று விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு மந்திகை ஆஸ்பத்திரியின் சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

(எ-4-3-70-118-173)

## மோ. சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பு வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிள்களில நடமாடும் குழுவினர், அண்மைக்காலமாக பொதுமக்களின் [illegible] களவாடுவதும், வர்த்தக நிலையங்களில் கொள்ளையடித்து, சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுவருவதாகவும் -

யாழ். மக்கள் மற்றும் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழுவும் பொலீஸ் நிலையத்தில முறைப்பாடு செய்துள்ளனர்.

[illegible]றான, சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்த அடுத்த வாரத்திலிருந்து சகல மோட்டார் சைக்கிளையும் பொலீஸார் ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு சோதனை செய்யவிருக்கின்றனர்.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மோட்டார் சைக்கிள் சட்டத்திற்கமைய பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை வைத்திருக்கும்படி யாழ்ப்பாண சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி காரியாலயம் தயவுடன கேட்டுக்கொள்கிறது - என்று அதில் உள்ளது.

(எ-4)

## மூத்த தளபதி கேணல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவீரர்களின் பெற்றோர்கள் 'பாண்ட்' வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதுடன், நினைவு நிகழ்ச்சிகள ஆரம்பமாகும், கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், பொதுச்சுடரேற்றல் ஆகிய நிகழ்வுகளுடன் கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் புனரமைக்கப்பட்ட நினைவுசின்னங்கள் திரைநீக்கம செய்து வைக்கப்படும் நினைவுரைகளும இடம்பெறும் இன்று காலை 9 மணிக்கு முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள கிட்டு பூங்காவில் விசேடநினைவு நிகழ்வுகள் இடம்பெறும் பொதுமக்கள், விடுதலைப் புலிகளின் போராளிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து அஞ்சலி செலுத்துவர்.

(எ-4-9-173-70)


SUBRA (14) சித்தன்கேணி

பொருளியல A/L 2005

திரு.ஜெயகுமாா B.A .(HONS) Eco-Spl.

புதிய பிரிவுகள் ஆரம்பம்

பிரிவு I

Mon. Wen. } 6 - 7 a.m.

அலகு-பேரினப் பொருளாதார சமநிலை

ஆரம்பம்: 19.01.2004

திங்கள் காலை 6 மணி.

பிரிவு II

Tues. Thu. } 6 - 7 a.m.

அலகு-சந்தைப் பொருளாதாரம்

ஆரம்பம்: 20.01.2004

செவ்வாய் காலை 6 மணி.

பிரிவு III

Sat. Sun. } 6 - 8 p.m. (மின் ஒளியில்)

துரித மீட்டல் [ஆரம்ப அலகிலிருந்து]

ஆரம்பம்.17.01.2004 [சனி மாலை 6 மணி.]

தனிப்பட்ட அனுமதி வழங்கப்படும

அனுமதிகள் வரையறுக்கப்பட்டவை

(சி-32762)(36-11)








[illegible]த்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.01.2004இல் [illegible] வெளியிடப்பெற்றது.